# மனித உரிமைகள்
# HUMAN RIGHTS

## சட்டத்தை அமுல்படுத்துவதிலும் போலிஸ் நடத்தையிலும் உள்ள கோட்பாடுகள்:

காவல்துறையினர் கடமை, கண்ணியம், கட்டுபாடு என்ற தாரகமந்திரத்திற்கு தகுதி உடையவர்களாக நடந்துகொள்ளவேண்டும். சட்டத்தை நிறைவேற்றும்போது நேர்மையாகவும், நாணயம் தவறாமலும் மனிதாபிமானத்தோடு எந்தவித பாகுபாடும் இன்றி, நடுநிலைவகுத்து செயல்படவேண்டும்.

காவல்துறையினர் சட்டத்தை நிறைவேற்றும்போது காலதாமதமின்றி குறித்தநேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவரும் பொதுமக்களிடம் கடமையுணர்வுடன், கனிவுடன், இனிமையான வார்த்தைகளால் இன்னலை நீக்கவேண்டும். வழக்குபதிவு செய்யும்போது முதல்தகவல் அறிக்கை நகலை இலவசமாக புகார் கொடுப்பவருக்கு வழங்கவேண்டும். மனுக்களை பெறும்போது அத்தாட்சி அளிக்கவேண்டும். பொதுமக்களின் சேவகர் நாம் என்பதை உணர்ந்து அவர்களை மரியாதையாக நடத்தவேண்டும்.

சட்டத்தை நிறைவேற்றும்போது பொறுப்பில்யுள்ள காவல் அலுவலர் நல்ல குணநலன்களை கொண்டவராகவும் ஒழுக்கசீலகராகவும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் இருக்கவேண்டும்.

மேலேசொன்ன நெறிகள் (Ethics) சட்டத்தை அமுல்படுத்தும்போது சட்டரீதியாகவும் விதிகளின்படியும், இயற்கையின் நியதியாகவும் கடைபிடிக்கவேண்டும்.

நெறிகள் (Ethics) என்பது என்ன? பொதுவாக ஒருவன் வாழ்க்கையில் இயற்கையின் நியதியாகவே நல்ல குணநலன்கள் பெற்றிருக்கவேண்டும் என்பது பல இலக்கியங்களிலும், நூலிலும், இதிசாகங்களிலும், வேதநூல்களில் வலியுறுத்தப்பட்டது. மேற்தகைய இயற்கையிலமைந்த குணநலன்களை தொழில்ரீதியாகக்கூடிய கோட்பாடுகளை (Professional Ethics) செயலாற்ற சட்டமும், விதிகளும் அவ்வப்போது போடப்படுகின்றனர், கடைபிடிக்கவேண்டிய கோட்பாடுகள் சரியாக வரையறுக்கப்பட்டுள்ளது. எந்தஒரு செயலும், செயல்முறை சட்டமும், போலிஸ் சட்டம், மத்தியபனி நன்னடத்தைவிதி மற்றும் இந்திய அரசியல் சாசனத்தில் கூறப்பட்ட முன்னுரை, ஜீவாதார உரிமைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகள் ஆகும்.

நன்னடத்தையும் கோட்பாடும் என்றபோது (Good Manners and Ethics) காவல்துறையினர் எப்படி பொது இடத்தில் பொதுமக்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டும் என்பதனை சார்ந்தே இருக்கிறது. உதாரணமாக, பொதுஇடத்தில் சீருடையில் பணிசெய்யும் ஒரு காவலர் அல்லது காவல்அதிகாரி பலர்பார்க்க புகைபிடிக்கிறார் என்றே வைத்துக்கொள்ளுங்கள். பொதுமக்கள் அல்லது பெண்கள் அவர்மீதுவைத்திருக்கும் நம்பிக்கை தளர்ந்துவிடும். காவல் துறையினர் மனிதர்களின் குணநலன்களையும், நடத்தையும் தெரிந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்போது நாமும் பொதுமக்களின் பார்வைக்குபடுகிறோம் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். பொதுமக்களிடம் காவல் துறையினர் கன்னியமாகவும், நேர்மையாகவும் நண்பர்கள் போலவும் பழகவேண்டும்.

பொதுவாக காவல்துறையினர் பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடியவர்கள். இந்த நோக்கத்திற்காக காவல்துறை இயங்குகிறது. ஆகவே காவல்துறையினர் நடத்தையில் உள்ள கோட்பாடுகள் நல்ல நடத்தையை அடிப்படையாகக்கொண்டு செயல்படுத்தவேண்டும்.

சட்டத்தின்முன் அனைவரும் சமம். உயர்ந்தவர், தாழ்ந்தவர், பணம்படைத்தவர், ஏழைகள் என்று வேற்றுமைகளின்றி எல்லோருக்கும் சேவைசெய்யவேண்டும். சுயமரியாதையும், தைரியமும், நல்ல நடத்தையும் தனிப்பட்ட வாழ்க்கையில் தூய்மையும் கொண்டு தன்னடக்கத்தோடும் நடந்துகொள்ளவேண்டும். எண்ணத்தாலும், செயல்களாலும், நேர்மையோடும் நடந்துகொள்ள வேண்டும்.

சட்ட விதிகளை மீறாமல் செயல்படவேண்டும். குற்றவாளியை கைதுசெய்தல், சோதனை செய்தல், அவர்களிடமிருந்து பொருட்களை கைப்பற்றுதல், புகார் கொடுக்கும்போது எதிர்மறை நோக்கு இல்லாமல் உடன் வழக்குபதிவு செய்தல். புலன்விசாரணை செய்யும்போது நற்பண்புகளுடன் சாட்சியம் சேகரித்தல் அல்லது சாட்சிகள் விசாரித்தல். நேரு அவர்கள் சொன்னதுபோல, “ஒவ்வொரு போலிஸ்காரரும் சீறுடை அணிந்த குடிமகன்” என்பதனை நெஞ்சில் நிறுத்திவைக்க வேண்டும்.

## What is Ethics?

Rules of conduct denoting right and wrong. எவை சரி அல்லது தவறு என்பனவற்றை மனித ஒழுக்கத்திற்கு விரித்துரைக்கும்கலை. இவற்றை தர்மசாஸ்திரம், நீதிநெறி, நீதி நூல், அறநூல் எனலாம். மனித நெறிகளுக்கு உட்பட்டு வாழக்கூடிய நிலையில் மனிதன் எவ்வாறு எல்லாம் நடந்துக்கொள்ள வேண்டும் என்ற இனங்களைப்பற்றி ஆராயும் அறிவியல்துறை. மனித இயல்பானது ஒன்றாக கவனத்தை ஈர்க்கும் அளவு தனக்கு பயனற்றதும் பெரும்பாலும் இன்னது என்று விவரிக்க இயலாததானதாக உள்ளது.

### தனிமனித ஒழுக்கம் அல்லது தனிமனித உரிமை:

ஒவ்வொரு மனிதனும் தான் நினைத்தபடியெல்லாம் செயல்படுவதும், தான் நினைத்தபடியெல்லாம் செயல்படும்படி முடியாமல் இருப்பதுமே தனிமனித ஒழுக்கம் அல்லது தனிமனித உரிமை எனலாம்.

### மனித உரிமை:

எவருக்கும் எந்தவித தீங்கும் ஏற்படாதவரை ஒருவர்தான் நினைத்தபடியெல்லாம் செயல்படுத்துவதும் பிறருடைய உரிமைக்கு பாதிப்பு ஏற்படுவதினால் தான் நினைத்தபடி செயலை செய்ய முடியாமல் இருப்பது மனித உரிமையாகும்.

ஒழுக்க நியதிகள் ஒவ்வொரு மனிதனுக்கு வேறுபட்டது அல்ல, வாழ்க்கையில் முக்கிய அடிப்படையே மனித ஒழுக்கம்தான். மற்றவனின் ஒழுக்கத்தைப்பற்றி கேள்வி இடுமுன் தன்னுடைய கடமையை முழுமையாக செய்யவேண்டும். இதுவே மனித ஒழுக்கத்தின் முழு வெற்றி.

மனிதன் நேசிக்க கற்றுக்கொண்டால் சாதி, சமய, மொழி வேறுபாடு இல்லை எனலாம். மனிதன் சீர்கேட்டால் சமூகஒழுங்கு குலைவு ஏற்படுகிறது. அதன்வழியே வன்முறை ஏற்படுகிறது. “வன்முறையின்மீது நிலையான எதனையுமே அமைக்க முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை” என்றார் காந்தியடிகள். வாழ்க்கை ஓட்டத்தில் நிலையற்றதை உறுவாக்கவேண்டும் என்பது என்றும் நிலையானதை சீர்குலைக்க வேண்டுமென்றும் சிலர் நம்பிக்கை வைப்பதினால் மனித மீறல்கள் நம்மைமீறி போகின்றன.

இச்சமூக மீறல்கள் சமூக நோயின் அறிகுறியாகும். சமூக பிரச்சனைகள் தோன்றி சமூகம் சமூகமாக வேலை செய்த்தனை அச்சுறுத்தும் போது சமூகஒழுங்கு குலைவு தோன்றுகிறது. தனிமனித ஒழுங்கு குலைவு விடுப்புமுறைகளை முழுதைபடுத்தி ஆளுமைக்குள் ஒருமுகப்படுத்த வேண்டும்.

பண்பாடு மற்றும் ஒருமுகப்படுத்தும் அலுவலையும் சமூக ஒழுங்கையும் அழித்து ஒழுங்கு குலைவு ஏற்படுத்துகிறது. இதைப்போல் எந்த வேறுபட்ட நடத்தையும் விடுப்பு முறைகளை ஆளுமையினுள் முழுமைப்படுத்துதலை தொந்தரவு செய்தலை தனிமனித ஒழுங்குக்குலைவு எனலாம். தனிமனித குலைவு ஒருவருடைய நலத்தை சமூக நெறிகளிலிருந்து வேறுபடுவதை தெரிவிக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தன் உரிமைகளை பெறுவதற்கு முழு உரிமையுண்டு. தன்னலத்தை அகற்றினால் அடிப்படை ஒழுங்குணர்வை ஏற்படுத்த முடியும். தற்காப்பு அச்சமின்றி இயற்கை அன்போடு வாழமுடியும். இன்றையத்தேவை பொதுவாழ்வில் ஒழுக்கம், நேர்மை, உண்மையான வாழ்க்கை நெறிமுறைகள் ஆகியவற்றை கடைபிடித்து வேற்றுமை மறந்து ஒற்றுமையை வளர்க்க பாடுபடவேண்டும்.

பிறமனிதனுடைய உரிமைகளை மீறாமல், அவமதிக்காமல் செயல்படும்போதெல்லாம் நாம் சுதந்திரமாக செயல்பட முடிகிறது.

மனித ஒழுக்கம் என்பது மக்களுடைய மனத்தின் அமைதியை இழக்காமல் இருப்பதே. என்றைக்கு மக்கள் அனைவரும் சாதி, சமய, மத வழிபாட்டிற்கு, உரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அன்றைக்குத்தான் அவர்கள் வாழ்கிறார்கள் என்று கருதலாம்.

மக்கள் சேர்ந்துவாழ முற்பட்டது முதல் சமுதாயத்தில் பல்வேறுபட்ட மனித இயல்புகளும் செயல்படத்தொடங்கின. வழிமுறைகளும் பலதிறப்பட்ட நிலைகளும் ஏற்பட்டன. எளிதாக வாழ நினைத்து மகிழ்வை கடினமாக உணர்வைப்பற்றி எய்த முயன்ற மனப்பாங்கு உண்டாகத் தொடங்கியது.

நெறிமுறை தவறி ஒழுக்கம் பிறழந்து வாழும் மக்கள் சமுதாயத்தில் இருக்கக்கண்டனர். அத்தகைய மக்களுக்கு உரிய கண்காணிப்பும், முறையாக கட்டுப்பாடும் ஊட்டப்பட்டு சமுதாயத்தின் வறைமுறைகளுள் வாழவழி செய்வது இன்றியமையாதது ஆயிற்று. அத்தகை அறிநிலை பிறழந்த போது சமுதாயத்தினருக்குள் உயிரையும் உடமைகளையும் தக்க பாதுகாப்புடன் பேணிகாக்கவேண்டிய இன்னிறமையாமையும் ஏற்பட்டது.

மக்களிடையே நெறி பிறழ்ந்த தீயவர்கள் வாழ முற்பட்டபோது அறநூல்கள் (Ethical Literature) தோன்ற முற்பட்டன. மக்களை நெறிபடுத்தி வாழ்வதற்கு வாழ்ந்து அறம் செழிக்க இத்தகைய நீதிநூல்களும், அறநூல்களும் வாழ்க்கைக்கு கட்டுக்கோப்பான இலக்கணங்களை வகுத்தன.

### மனித உரிமை – மனித ஒழுக்கம் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்:

மனித உரிமைகள் என்பது மனிதனுக்கு கொடுக்கப்படும் சுதந்திரம். உரிமைகள் ஒழுங்காகக் கொடுக்கப்படும்போது அங்கு கடமைகளும் ஒழுங்காக செயல்படும். மாமேதை மெக்கன்சி மனித இனம் கண்டுகொள்ளபடவேண்டிய கடமைகளை வரையறுக்கிறார். அவை.

1. வாழ்க்கைபற்றிய நன்மதிப்பு கொள்ளல்.
2. சுதந்திரத்தைப்பற்றிய மேன்மதிப்பு கொள்ளல்.
3. ஒழுக்கத்தைப்பற்றிய நன்மதிப்பு கொள்ளல்
4. உடமைகளை பற்றிய ஆற்றுமைகொள்ளல்.

5. சமுதாய அமைப்பும் அதன் சார்பு பற்றிய நன்மதிப்பு கொள்ளல்.

6. முன்னேற்றம் பற்றிய நன்மதிப்பு கொள்ளல்.

மேற்கொள்ளபடவேண்டிய கடமை உணர்வுகள் நேர்மையான ஒழுங்காக, உண்மையாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். உரிமைகள் பற்றிய உண்மை நிலையை உணரலாம். உரிமைகள் இரண்டு வகைப்படும்.

1. சட்டம் சார்ந்தது
2. சட்ட முறைமைக்கு உட்படாதது.

**சட்டம் சார்ந்தது:**

மனித இனத்திற்கு கொண்டுவரப்பட்ட சட்ட விதிகள் மனிதனுக்கு சில உரிமைகளை அளிக்கின்றன. அவை மனிதனுக்குண்டான தனி மனித சுதந்திரம். கல்வி கற்பது வேண்டப்பட்ட உடமைகளை வைத்துக்கொள்ளும் உரிமை முதலியன.

**சட்டமுறைக்கு உட்படாதது:**

இதைச்செய்ய வேண்டும், இதைச் செய்யக்கூடாது என்ற சட்டவிதி இல்லை என்றாலும் உரிமை ஒன்று உண்டு. இது மனிதாபிமான நிலையில் நிகழ்வது.

1. நிலம் ஒருவருக்கு சொந்தமானது, ஆனால் அதன் வழியாகசெல்ல பிறருக்கு உரிமையுண்டு.
2. பெற்றோருக்கு பிள்ளைகள் அடங்கி நடத்தல்.
3. கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனும் கட்டுப்பட்டு நடத்தல்.

சட்ட தொகுப்புகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டால் பண்டைக்கால ஆட்சி முறைப்படி எந்தவிதமான சட்டம் நடைமுறையில் இருப்பினும் மக்களுக்கிடையில் மன்னன் எந்தவகை வேறுபாடும் கருதாமல் அரசின் நீதிநெறிகளுக்கு முரண்படாத அளவில் குடிமக்கள் அனைவரும் ஒன்றாகக்கருதி ஆட்சி செய்தான் என்பது விளங்குகிறது.

இயற்கைச் சட்டமும் அதன் கொள்கைகளும் அழிவற்றவை என்கிறார் புதின தாமஸ் அகினாஸ். இச்சட்டம் தனிமனிதனுக்கும் அரசுக்கும் உள்ள உறவைக்காட்டுகிறது. ஒரு நாட்டின் நீதி அது தன்மக்களுக்கு ஆற்றும்தொண்டில் வெளிப்படுகிறது. கடமை உணர்வற்ற மன்னனை மக்கள் புறக்கணிப்பதுடன் கீழ்படியவும் மாட்டார்கள். இக்கருத்தை அடிப்படையாக கொண்டு இடைக்காலத்தில் மனிதனின் இயற்கை உரிமைகள் நன்கு அமைக்கப்பட்டன. பின்னர் குடியரசின் மக்களுக்கு எல்லாமும் கிடைக்கும்படி வரையறுக்கப்பட்டது.

**அரசியல் சட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் மனித கடமைகள்:**

1. சட்டத்தின்முன் எல்லொரும் சமம்.

2. சமுதாய உரிமைகள்

3. அரசியல் உரிமைகள்

4. சிறுபான்மையினரின் உரிமைகள்

5. சந்தேகத்திற்குறிய மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவர் உரிமைகள்.

6. பொருளாதார மற்றும் நாகரீக உரிமைகள்

7. தனிநபர் தொடர்பான உரிமைகள்

8. சமையகல்வி மற்றும் பண்பாட்டு உரிமைகள்

## மனித உரிமைகள் அதிகார ஆணையம்

மனித உரிமைகள் அதிகார ஆணையம் 1993-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ஆம் நாள் வடிவெடுத்தது. இவை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டவர் அல்லது அவர் சார்பாக ஒருவரின் பிராதைப்பெற்று அதன்மீது விசாரணை நடத்துதல். மனித உரிமை மீறப்படும்போது பொதுஜன ஊழியர் எவ்வகையிலாவது மனித உரிமைகளை அலட்சியம் செய்து, அது மீறப்படும் நிலையில் தடுக்கத் தவறினாரா என்றும் மனித உரிமைகளை பற்றிய விஷயங்களை பரப்புவது மற்றவர்களுக்கு போதனைசெய்வது தொடர்பான முயற்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியனவாம்.

உரிமைகள் எப்படி இருக்கவேண்டும் என்று வரையறுப்பது மட்டுமல்லாமல் அனைத்து நாடுகளுமே அவற்றை ஏற்றுநடக்கும் சூழ்நிலை தேவை என்பதனையும் இவ்வழிமூலம் பிரகடனப்படுத்தப்படுகிறது.

**சுதந்திரத்திற்கு முந்தைய பாரதத்தின் மனித உரிமைகள் :**

அ. இந்திய அரசியல் சட்டவரைவு 1895 (உள்ளாட்சி முறை) ஹோம்ரூல் சட்ட வரைவு என்றும் வழங்கப்பட்டது.

ஆ. மாண்டேகு-செம்ஸ் போர்டு அறிக்கை 1918 ஐரிஷ் குடியரசின் 1921 ஆண்டுகள் அரசியல் சட்டத்தின சாரமுடைய அடிப்படை உரிமைகளின் பட்டியலாகக் கொண்டுள்ளது.

இ. காமன்வெல்த் நாடுகள் எனும் சுதந்திரக் கூட்டமைப்பு நாடுகளின் 1925-ஆம் ஆண்டில் சட்டவரைவு அடிப்படை உரிமைகளை நிகர்த்த குறிப்புகள் கொண்ட அறிக்கையாகும்.

ஈ. மோதிலால் நேரு கமிட்டி

**இந்திய மனிதனுக்கு சுதந்திரமாக சமத்துவ ரீதியில் சுதந்திரம்பெற வழி செய்கிறது. அவை:**

1. வாழ்வில் சுகந்திரம் - ஒரு நாட்டின் உருவாக்கப்பட்டு அதன் மக்களுக்காக பாதுகாக்கப்படும் உரிமைகளும் தனி மனித சுதந்திரம் ஆகும்.

2. அரசியல் சுதந்திரம் - நாட்டின் நிர்வாகத்தில் பங்குகொள்ளும் உரிமையாகும்

3. பொருளாதா சுதந்திரம் - தங்களது உணவு உடை உறையுள் (வாழுமிடம்/ ஆகியவற்றை தங்குதடையின்றி பெறுவதாகும்.

4. இயற்கை சுதந்திரம் - நாட்டின் சுதந்திரத்தையும் குறிக்கும். மனித உரிமைகள் சித்தாந்தத்தினை பல்வேறு கால கட்டங்களில் வெவ்வேறான வரலாற்றேடுகளின் கால அட்டவனைகளின் மூலம் அறியலாம்.

## அடிப்படை குணநலன்கள் - அடிப்படை உரிமைகள்

ஒரு மனிதன் இயற்கையாகவும் ஒழுங்காகவும் வாழ்வதற்கும் மிகவும் அத்தியாவசியமானவை அடிப்படை உரிமைகள். இந்த அடிப்படை உரிமைகள் இல்லாமல் மனிதன் மனிதனாக வாழமுடியாது. தனிமனிதன் தன்னைத்தானே பூர்த்தி செய்துகொள்ள முடியாது. ஆகவே அடிப்படை உரிமைகள் என்பது இயற்கை உரிமைகளுக்கு ஒத்தது ஆகும்.

**அடிப்படை குணங்கள் :**

1. முக்கியமாக தனிநபர் ஒருவர் தன்னை பூர்த்தி செய்துகொள்ள அவைகளெல்லாம் தேவைப்பட்டது.

2. ஆனால் அவைகளெல்லாம் அவனால் சுருக்கமாக மனத்தால் மட்டும் எண்ணக்கூடிய உரிமைகள் அல்ல. அவைகள் சமூகத்தால் அங்கிகரிக்கப்பட்டும் வரையறுக்கப்பட்ட உரிமைகளாகும்.

3. அந்த உரிமைகள் எல்லாம் சக்தி வாய்ந்ததும் நிலையானதும் அல்ல. அவைகள் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறக்கூடியவை. ஒவ்வொரு காலத்திலும் அவைகள் அடிப்படை எண்ணங்களாகும்.

4. இந்த அடிப்படை உரிமைகள் எல்லாம் மனிதனின் பழக்கத்தினாலும் தேவையினாலும் முறையினாலும் மனித அறிவினால் கொண்டுவரப்பட்டதாகும்.

5. அடிப்படை உரிமைகள் முக்கியமாக தனிப்பட்டவரின் உரிமைகளைவிட சிறுபான்மையோரின் நலனைகாப்பதே கருத்தாகக் கொண்டது.

6. எல்லோருக்கும் சமூக நீதி, பொருளாதார, அரசியல், கருத்து சுதந்திரம், நம்பிக்கை உரிமை, உண்மை, வழிபாடு, சம அந்தஸ்தையும், சந்தர்ப்பங்களையும், சகோதரத்துவத்தையும் தனிப்பட்டவருக்கு மரியாதையையும் தேசத்தின் ஒற்றுமைக்கும் உறுதி செய்வதோடு அவைகளை அடையவேண்டும் என்பதனையும் சிந்தனையில் கொண்டது.

## அடிப்படை உரிமைகள்

ஒவ்வொரு தனிமனிதனும் தான்வாழ்வதுடன், மற்றவரையும் வாழவிடும் நெறிமுறைகளை உணர்த்துவதே இதன் மூலக்கருத்து. இப்பிரகடனம் ஐக்கியநாடுகளின் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டு எவ்வித எதிர்ப்புமின்றி அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1. சகோதர மனப்பான்மையுடன் பழகவேண்டும்.

2. இனம், பால், நிறம், மதம், அரசியல் இதர கருத்துகள், தேசிய அல்லது சமூகவழிமுறை, சொத்து, பிறப்பு மேலே சொன்னவற்றில் கூறப்பட்டுள்ள எல்லா உரிமைகளும் அனுபவிக்க எல்லோருக்கும் உரிமையுண்டு.

3. வாழ்வதற்காக உரிமையும், இடையூறு இல்லாத வாழ்வும்வாழ உரிமையுண்டு.

4. அடிமையாகவோ அல்லது வசதியுரிமை உடையவராகவோ வைத்துக்கொள்ள முடியாது.

5. கொடூரமான நடவடிக்கைக்கும் அவமதிக்கும் எந்த ஒரு தண்டனைக்கும் உட்படுத்தக்கூடாது.

6. தகுதியை எந்த இடத்திலும்பெற எல்லோருக்கும் உரிமையுண்டு.

7. சட்டத்தில் எந்த வித்தியாசமும் வேற்றுமையும் காட்டாமல் அனுபவிக்க எல்லோருக்கும் உரிமையுண்டு.

8. அளிக்கப்பட்ட உரிமைகளை மீறுவோர்மீது தகுந்த பரிகாரம் தேடஉரிமையுண்டு.

9. காரணமின்றி கைது செய்வதோ பாதுகாப்பில் வைப்பதோ வெளியேற்றுவதோ கூடாது.

10. உரிமைகளுக்காகவும் கடமைகளை பாதுகாக்கவும் தகுந்த நீதிமன்றங்களை அணுகுவதற்கு முழுஉரிமையுண்டு.

11. குற்றத்திற்கான தண்டனை குற்றமிழைத்தபோது எவ்வாறு இருந்ததோ அதைத்தான் அளிக்கப்படவேண்டுமே தவிர அதற்கும் அதிகமானதல்ல.

12. மற்றவரின் உரிமைகளில் போராடுவதற்கு உரிமை கிடையாது.

13. தன்நாட்டில் எந்தப்பகுதியில் சென்றுவரவும் வெளிநாட்டிற்கு சென்றுவரவும் உரிமை பெற்றவர்கள் ஆவார்கள்.

14. வெளிநாடுகளுக்குச் சென்று குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கோரும் உரிமை கிடைக்காது.

15. ஒரு நாட்டின் உறுப்பினராக இருக்க ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையை வேறுநாட்டிற்கு மாற்றும் உரிமையை பறிக்கக்கூடாது.

**மனித உரிமைகளின் வித்துறையும் சமூக சுதந்திரமும் :**

1. இந்திய அரசியல் சாசனத்தில் உள்ள மனித உரிமைகளும் பிற சட்டங்களில் உள்ள உரிமைகளும்.
2. ஜனநாயகத்தில் மனித உரிமைகளின் அத்தியாவசியம்.
3. மனித உரிமை அமைப்புகளும் சமூக சுதந்திர அமைப்புகளும்.

**மனித உரிமையில் இந்திய அரசியல் சாசனமும் மற்ற சட்டங்களும். :**

இந்திய அரசியல் சாசனத்தின் கோட்பாடு இந்திய பிரஜை இந்திய நாட்டை வலிமைமிக்க சமுதாய மதசார்பற்ற ஜனநாயகமாக உருவாக்க எடுத்துக்கொண்டதில் சமூகநீதி, சுதந்திரம், சமத்துவம்

ஒற்றுமை மற்றும் தேசிய ஒறுமைப்பாட்டுடன் செயல்பட ஏற்படுத்தப்பட்டதாகும். இத்ற்கு வலிமையூட்ட அடிப்படை உரிமைகள் இந்திய அரசியல் சாசனம் பகுதி மூன்றில் கொண்டுவரப்பட்டது.

1. **சம உரிமை -(பிரிவி 14 to 18) -** சட்டத்தின் முன் அனைவரும் சமம், மதம், ஜாதி, ஜனநாயக இனம், பால், இடம் வேறுபாடில்லாமை — வேலையில் சமவாய்ப்பு, தீண்டாமை ஒழித்தல் முதலியன.
2. **சுதந்திர உரிமை — (பிரிவு 19 to 22)** — பேச்சு சுதந்திரம், தண்டனை, பாதுகாப்பு, வாழ்கை அல்லது தனிமனிதன் சுதந்திரம், சிறையில் அடைப்பதில் பாதுகாப்பு.
3. **சுரண்டலுக்கு எதிர்ப்பான உரிமை — (பிரிவு 23 & 24) —** விபச்சாரத்தை தடுத்தல், கொத்தடிமை ஒழிப்பு.
4. **மத ரீதியான —** (பிரிவு 25 வடி 28) — மத சுதந்திரம் பணிகளை கவனித்தல், பலவித ஸ்தாபனங்களில் மத கொள்கை ஊடுருவலை தடுத்தல்.
5. **கலை பண்பாட்டு உரிமை — (பிரிவு 29 & 30) -** சிறுபான்மை கல்வி ஸ்தாபனங்கள் அமைத்தல்.
6. **அரசியல் ரீதியான பாதுகாப்பு - (பிரிவு 32) —** கோர்ட்டு மூலம் ரிட் வாங்குதல் புரஹிபிஷன், ஹேபியஸ் கார்பஸ், செர்டியோராரி மற்றும் கவோ வாரண்டோ ஆகும். ஜெர்மிபேந்தம் சொன்னது "உரிமை ஒரு சட்டத்தின் குழந்தை, உண்மையான சட்டத்திலிருந்து உண்மையான உரிமைகள் வருகிறது" இந்தியாவில் உரிமைகளுக்காக 50-ஆண்டுகளாக பல சமூதாய சீர்திருத்த சட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. மேலும் உச்சநீதிமன்றம் அவ்வப்போது மனிதயுரிமைகளைக் காக்க உத்தரவுகள் போடப்படுகின்றன.

உள்நாட்டில் பாதுகாப்பை நிலைநாட்ட போலீஸ் பயன்படுத்தப்படுகிறது. இந்த சமயங்களில் மனித உரிமை மறுக்கப்படுகிறது. மனித உரிமை பாதுகாப்பு தேசிய சட்டங்களின் ஒரு அங்கம், சட்டத்தை மீறிய செயல் இருக்கக்கூடாது. ஜவர்கலால் நேரு சொல்லிய துப்பாக்கி பிரயோகம் இருக்கக்கூடாது என்பதை நினைவில் கொண்டு மனிதனின் கண்ணியத்தை காப்பாற்ற வேண்டும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரகை மந்திரத்தை மறக்ககூடாது.

## மற்ற சட்டங்களில் உள்ள மனித உரிமை பாதுகாக்கும் முறைகள்:

1948-யில் அகில உலக ரீதியில் மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டது. அதன்படி சட்டத்தின்முன் அனைவரும் சமம். எல்லோரும் சுதந்திர உரிமை பெற்றவர்கள். எல்லோரும் சமயுரிமைகள் பெற்றவர்கள். சமவேலை வாய்ப்பில் பங்கு உண்டு. தொழில் சங்கம் வைத்துக்கொள்ள உரிமை உண்டு. சுதந்திரமாக செல்ல உரிமை உண்டு. சட்டத்தில் சொல்லாதபடி தண்டனைக்கும் உட்படுத்த கூடாது. இந்திய மனித சட்டத்தில் சொல்லாதபடி தண்டனைக்கும் உட்படுத்தக்கூடாது. இந்திய மனித உரிமைகளுக்கும் அகில உலக மனித உரிமை கோட்பாடுகளுக்கும் தொடர்பு உண்டு.

இந்திய பீனல் கோடிலும், தனி சட்டங்களிலும் குற்றம் என்றால் என்ன என்பதை பிரிவு 40-இ.பி.கோ-வில் சொன்னபடி சட்டத்திலுள்ள குற்றங்களுக்கு சொல்லியபடியே தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

குற்ற விசாரணைமுறை சட்டத்தில் மனித உரிமைக்கு நிறைய பாதுகாப்பு உள்ளது. பிரிவு 46-குற்ற விசாரணைமுறை சட்டத்தில் ஒருவனை கைது செய்யும்போது தேவையான அளவு பலவந்தபடுத்துவதும், ஆனால் அவன் உயிரை எடுக்கக் கூடாது. பிரிவு 49-படி கைது செய்யும்போது அதிக கட்டுப்பாடு இருக்ககூடாது. பிரிவு 50-யின் படி எதற்காக கைது செய்கிறோம் என்பதைக் கூறவேண்டும். பிரிவு 51-யின் படி அவன் உடுத்தும் ஆடையை கைப்பற்றக் கூடாது. பொருட்களை கைப்பற்றினால் ரசீது கொடுக்கவேண்டும். இல்லையேல் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தவேண்டும். பிரிவு 57-படி கைது செய்யப்பட்டவரை 24-மணி நேரத்திற்கு அதிகமாக வைத்திருக்கக் கூடாது. பிரிவு 58-யின் படி யாரை கைது செய்தாலும் நீதிபதிக்கு தெரியப்படுத்தவேண்டும்.

## உச்சநீதிமன்ற உத்தரவுகளும் மற்ற சட்டங்களிலுள்ள மனித உரிமை மீறல் ஷரத்துகளும்

உச்சநீதிமன்றம் கைது சம்மந்தமாக பிறப்பித்த 11-கட்டளைகளை அறிந்து அதன்படி செயல்படவேண்டும். இல்லையேல் உரிமைமீறிய செயலாக சொல்லப்படும். தீண்டாமை ஒழிப்பில் குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் அந்த குற்றத்தை செய்ய தூண்டியவர்கள் ஆவீர்கள். வன்கொடுமை சட்டத்தில் SC/ST மக்களுக்கு பாதுகாப்பு அற்ற நிலையிருந்தாலும் அதன்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

போலீஸ் அமைப்பு (உரிமை கட்டுப்பாட்டு) சட்டப்படி காவலர்கள் சங்கம் வைக்கக்கூடாது. காவலர்களிடையே விரோத மனப்பான்மையை பரப்பினால் அது போலீஸ் விரோதத் தூண்டல், சட்டப்படி குற்றம் ஆகும். ஆகவே, அத்தகைய செயலை செய்ய யாருக்கும் உரிமை இல்லை.

பெண்களின் உரிமைகளை காப்பதிலும் காவல்துறைக்கு மிகவும் அதிக கடமை உண்டு. உலக ஜெனத்தொகையில் பெண்களின் எண்ணிக்கை பாதி, பெண்களுக்கு உரிமைகளை பலவகைகளில் பறிக்கப்படுகிறது. பெண்களின் கண்ணியத்தை தாக்குவதிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். பெண்களுக்கு பாதுகாப்பு அற்ற நிலை உருவாக்குவது கீழ்கண்ட சூழ்நிலைகள் - கொலை, கூட்டு கற்பழிப்பு, கற்பழிப்பு, கடத்தல், மனைவியை துன்புறுத்துதல், அடித்தல், மனைவியை எரித்தல், வரதட்சணை கொடுமை வரதட்சணை சாவு, விபச்சாரம், கிண்டல் செய்தல் முதலியன — மேலே சொன்ன குற்றசெயல்கள் எல்லாம் இ.பி.கோவில் தண்டனைக் குறியது. இது இல்லாமல் கீழ் கொடுக்கப்பட்டுள்ள சமூக சீர்திருத்த சட்டங்களும் பெண்கள் உரிமையை பாதுகாக்கிறது.

மேலே சொன்ன பின்னனியில் ஜனநாயக ஆட்சியில் மனித உரிமைகளின் தேவைகள் உணர்த்தப்படுகிறது.

### ஜனநாயகம், குடியரசு என்றால் என்ன?

குடியரசு என்பது மக்களை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நிர்வகிக்கப்படும் ஒரு அரசு. அதிக அளவில் பிரதிநிதிகள் உள்ள ஒரு கட்சி நடத்தும் ஆட்சியானது பொதுவாக எல்லா மக்களுக்கும் பொதுவான நன்மைகளை செய்வதாகும். ஜெர்மிபேந்தம் சொன்னது போல் "எல்லோரும் எல்லா நன்மைகளும் பெறவேண்டும் என்பது" அப்படி இல்லையென்றால் சமுதாயம் துன்பத்தில் இருக்கும். இங்குதான் மனித உரிமைப் பற்றிய பிரச்சனை எழுகிறது. குடியரசின் அடிப்படை கோட்பாடுகள் மனிதனின் வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம்மற்ற சுயமரியாதை என்ற

தாரகைமந்திரத்தில் அடங்கிவிடுகிறது. எப்போதாவது ஒரு தனிமனிதனின் சுதந்திரம், சுயமரியாதை பாதிக்கப்பட்டால் மனித உரிமைகள் மீறப்பட்டதாகப் பொருள். மேற்படி இந்த சட்டத்தை நிறைவேற்றுபவர்களின் தன்னிச்சை அல்லது ஒருதலைபச்ச நடவடிக்கையால் பறிக்கப்படுகிறது. மனித உரிமைகள் என்பதன் பொருள் "தன்னிச்சை நடவடிக்கை அல்லது ஒருவரை கைது செய்தல், அதன்படி செய்து சிறையில் அடைப்பது, துன்புறுத்துவ, நியாயமற்ற வழக்கு விசாரணை, கொடுமையான, வழக்கத்திற்கு மாறான தண்டனை வழங்குதல், தனிப்பட்ட சுதந்திரத்தில் ஊடுருவல் செய்வது, உணவு பங்கீட்டு உரிமையில் ஒருதலைபச்சம், இரக்கம் இல்லாமல் போதுமான உடல்நலம் காக்கும் செயல் செய்யாமை, போதுமான கல்வி வசதி இல்லாமை, பேசக்கூட சுதந்திரம் இல்லாமை, மத சம்மந்தமான வேறுபாடுகள், செய்தி அச்சு சுதந்திரம் இல்லாமை, போக்குவரத்தில் சுதந்திரம் இல்லாமை, அரசியலில் பங்கேற்றும் சுதந்திரம் இல்லாமைகளாகும்.

குடியரசில் மெஜாரட்டி குழு ஆட்சி செய்கிறது. தேர்தலில் தோல்வியுற்ற மைனாரிட்டி ஒரு சமுதாயத்தில் துன்பமடைய உள்ள சூழ்நிலையை ஏற்பதல்ல. அப்படி ஒருதாரர் அடையும் துன்பங்கள் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அரசியல் மற்றும் கலாச்சார ரீதியாகவும் இருக்கலாம். மனித உரிமைகளில் மேன்பட்ட உரிமையாக சுதந்திர உரிமையாக இருக்கும். குடியரசின் ஆட்சி எப்போதெல்லாம் அரசியல், பொருளாதார, நிதிநிர்வாக, பண்பாட்டுத்துறையில் ஒரு தனிமனிதனின் உரிமை மீறல் சொல்லப்படுகிறதோ அப்போதெல்லாம் ஒருநிலைபாட்டிலிருந்து விலகி இருப்பதாக குறைகூறப்படுகிறது.

குடியரசு ஆட்சியில் மனித மீறல் செயல்களில் கீழ்காணும் சூழ்நிலை, காரணங்கள் அல்லது பொருட்களைக் கொண்டு நடைபெறுகிறது.

1. குறிப்பிட்ட சமூதாயத்தினரில் பகுதி வருமையி,லும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும்போது.
2. பாதுகாப்பின்றி இருக்கும் மனிதர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.
3. விசாரணை இல்லாமல் நெருக்கடி சட்டங்களால் சிலர் துன்பம்படுத்தப்படுகின்றனர்.
4. ஜெயில் கைதிகள் மோசமான நிலையில் நடத்தப்படுகின்றனர்.
5. வரதட்சணை சாவு, வரதட்சணை கொடுமைகள்.
6. பாமர ஜெனங்கள்மீது போலீஸ் தாக்குதல், என்கௌவுன்டர் என்ற பெயரில் போலீஸ் மனிதர்களை சாகடிப்பது.
7. ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் பயங்கரவாதத்தின் தாக்குதல்.
8. தீண்டாமை ஒழிப்பு குற்றங்களில் அதிகரிப்பு
9. அத்தியாவசிய அல்லது மற்ற பொருட்கள் அழிக்கப்படுவது.
10. சமூகநீதியில் சீரான நிலை இல்லாமை
11. அரசியல் ரீதியான செயல்திறன்.
12. நீதி செயல் திறன்.

ஆகவே, குடியரசின் அதிகாரம் ஒரு தனி மனிதனின் வாழ்க்கைக்கும், பாதுகாப்பிற்கும் உத்திரவாதம் அளிக்கிறது. அந்த உத்திரவாதங்களை பாதுகாக்க குடியரசில் மனித உரிமைகள் தேவைப்படுகிறது.

## மனித உரிமையின் அமைப்புகள்

அரசால் நிர்மானிக்கப்பட்ட மனித உரிமை அமைப்புகளும், மனித சுதந்திர தன்னார்வ அமைப்புகளும் மனித உரிமைகளைக்காக்க செயல்பட்டு வருகிறது.

### என். எச். ஆர்சி — தேசிய மனித உரிமை ஆணையம்.

இந்த ஆணையத்தை மத்திய அரசு நிர்மானிக்கிறது. இது கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகிறது. (1) ஆணையத்தின் தலைவர் முன்னாள் இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆவார். (2) ஒரு உச்சநீதிமன்ற முன்னாள் பதவியிலிருக்கும் நீதிபதி ஒருவர் (3) மாநில உயர்நீதிமன்றத்தின் அல்லது முன்னாள் தலைமை நீதிபதி (4) மனித உரிமைப் பற்றிய நிபுணித்துவம் வாய்ந்த இரு உறுப்பினர்கள். (5) தேசிய மைனாரட்டி ஆணையம் தேசிய SC/ ST ஆணையம் மற்றும் தேசிய மக்கள் ஆணைய தலைவர்களை கொண்டது. (6) செக்கரட்டரி ஜெனரல் ஒருவர் - இதன் தலைமையகம் டெல்லியில் இயங்கும். இதேபோல் எல்லா மாநிலத்திலும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கொண்டு அரசு சார்பற்ற தன்னார்வ சுதந்திர அமைப்புகள் கீழே தரப்பட்டுள்ளது.

1. **பி.யூ.சி.எல் - மனித சுதந்திர மக்கள் ஒன்றியம் -** இது மனித உரிமை மீறல் புகார்களில் தலையிட்டு, அதற்கு தகுந்த செயல்கள் செய்வதோடு அதன் செயல்பாடுகளை நேர்மையுள்ள விசாரணைக்கு பயன்படுத்திகொள்ள வேண்டும். மனித சுதந்திர மற்றும் மனித உரிமை காக்கும் அமைப்புகள் புதுச்சேரியில் இந்தஅமைப்பு மனித உரிமை மீறல் சங்கதிகளை உண்ணிப்பாக கவனித்து வருகிறது. புதுச்சேரியில் நடந்த சில மனித உரிமை மீறல் நிகழ்ச்சிகளை இந்த அமைப்பு சுகுமாறன் என்பவர் மூலம் கண்டித்தது. இத்தகைய நேரங்களில் பத்திரிக்கை செய்தியாளர்கள் கவனித்து செய்தி தாள்களிலும், டி.வி. — யிலும், புத்தகங்களிலும் எழுதியுள்ளனர். புதுச்சேரியில் நடந்த சில மனித உரிமை மீறல் வழக்குகள் - ஒதியன்சாலை காவல் நிலையத்தில் நடந்த லாக்கப் மரணம், கிருமாம்பாக்கம் லாக்கப் மரணம், தன்வந்திரி நகர் காவல் நிலைய மரணம், அத்தியூர் விஜயா கூட்டு கற்பழிப்பு வழக்கு.

2. **சமூக நீதி சங்கங்கள்** - மைனாரிட்டி இனத்தவர்களுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகளுக்கு போராடி வருகிறது.

3. **பாட்டாளி மக்கள் ஆட்சி** — சமூக நீதிக்காக போராடி வருகிறது. இந்த விசயத்தில் மற்றெல்லா அரசியல் அமைப்புகளும் ஒருமித்த கருத்துகளை கொண்டுள்ளது.

4. ஈ.வெ.ரா. பெரியார் ஆரம்பித்த திராவிடர் கழகம் மனிதனின் சுயமரியாதை இயக்கமாக செயல்பட்டு வருகிறது.

## முனித உரிமை கோட்பாடுகளும் காவல்துறை பணியில் கடைபிடிக்கவேண்டியவையும்

போலிசின் தலையாய கடமை மனிதனின் வாழ்கையை, சுதந்திரத்தை, சுயமரியாதையை அவர்களுடைய சொத்துக்களை காப்பாற்றுவதே ஆகும். போலிசார் பொதுமக்களின் பார்வையில் மிகவும்

வெளிப்படுத்தப்பட்டவர்கள். போலிஸ் தன் சட்டக்கரங்களால் இவ்வேலைகளை தீவிரப்படுத்தும்போது மனிதன் உரிமைகள் பறிக்கப்படுகிறது. இரண்டாவதாக போலிசாரே மனித உரிமை மீறல்கள் செய்வது இது **"வேலி பயிரை மேய்ந்த செயல்"** மனித உரிமைகளை பற்றி பேசுவது சுலபம். உரிமை மீறல் செயல்களினால் துன்பப்பட்ட மனிதனின் துயர் போலிஸ் பிடியில் அவன் பட்ட கஷ்டங்கள் மட்டுமே தெரியும். போலிசார் பிராதுகளை பெறுகின்றனர். விசாரணையும் நடத்துகின்றனர். இந்த போலிஸ் பணியில்தான் முக்கியத்துவமும் மனித உரிமை செயல்களை காக்கும் பணியின் முக்கியத்துவமும் அடங்கியுள்ளது. போலிசார் வழக்குகளை பதிவு செய்வதிலிருந்து, புலன் விசாரணை செய்வது, சாட்சிகளை விசாரிப்பது, குற்றவாளியை கைது செய்வது, சோதனையிடுவது, பொருட்களை கைப்பற்றுவது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதுவரை உள்ள அத்துமீறல் செயல்கள் எல்லாம் மனித உரிமை மீறல் செயல்கள் ஆகும். இவைகள் கீழ்க்காணும் முறைகளில் மீறப்படுகிறது.

1. **கடுமையான சொற்களை பயன்படுத்துவது** — பொதுவாக போலிஸ் என்றாலே கண்ணியமற்ற முரட்டுதனமாக தீய சொற்களை சொல்பவர்களாகவே உள்ளனர். ஏந்த ஒரு நபரும் ஒரு சாதாரண சிறு குற்றம் சம்மந்தப்பட்ட புகார் கொண்டுவந்தாலும் கடும் சொற்களை உபயோகித்து அவர்கள் மனதை புண்படுத்துகின்றனர். "நாவினால் சுட்ட புண் ஆறாது" என்று வள்ளுவர் சொன்னதை மனதில் கொள்க.

2. **பிராது கொடுக்க வருபவர்களிடம் நடந்து கொள்ளும் முறை** — காவல் நிலையத்திற்கு பிராது கொடுக்க வருபவர்களை காலை முதல் மாலை வரை நிலையத்தில் இருக்க சொல்வது பெருந்தவராகும். அவர்களிடம் சாதுவாக குறைகளை கேட்டால் பாதி துன்பம் விலகியமாதிரி. பிடிக்கக்கூடிய குற்றம் சம்மந்தமாக பிராது வந்தால் சில வழக்குகள் பதிவு செய்வது கிடையாது. வழக்குகளை பதிவு செய்யாமல் மறைக்கப்படுகிறது. இது மனித உரிமை மீறல் செயல் என்பதில் ஐயமில்லை. சில வழக்குகளை பதிவு செய்யும்போது அவர்களுக்கு முதல்தகவல் அறிக்கையின் நகலை கொடுப்பதில்லை. அத்தகைய நகலை இலவசமாக கொடுத்தே ஆகவேண்டும் என்று சி.ஆர்.பி.சி. பிரிவு 154-ல் சொல்லப்படுகிறது. சில சமயங்களில் பிடிக்கக்கூடாத பிராதுகளும் வருவதுண்டு. அதற்கும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி வரும் தகவல்களை ஜடி.யில் எழுதவேண்டும். என்.சி. ரிஜிஸ்டரில் பதிவு செய்து ஒரு நல்ல பிராதுகாரரிடம் கொடுக்கவேண்டும் என்பது நியதி.

3. **போலிஸ் விசாரணை வழக்குகள் -** போலீஸ் விசாரணை வழக்குகளை பதிவு செய்து சம்பவ இடத்தை குறித்த நேரத்தில் பார்க்காததால் போலிஸ் தன் பணியிலிருந்து தவறுவதாக மக்கள் நினைப்பதோடு அவர்கள் உரிமை காக்கும் பணியில் போலிஸ் தவறுவதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

4. **சாட்சிகளை விசாரித்தல் -** சாட்சிகளை சரியான முறையில் விசாரித்து வாக்குமூலம் எழுதுவது கிடையாது. பொதுவாக உரிமைமீறல் செயல் கீழ்கண்டவாறு நடக்கிறது. 14-வயதிற்கு உட்பட்ட சாட்சிகளையும் பெண்கள் சாட்சிகளையும் அவ்வப்போது காவல் நிலையம் அழைக்கப்படுகின்றனர். இது தவறு சி.ஆர்.பி.சி.-யில் 160-யின் படி மேற்படி சாட்சிகள் உள்ள இடங்களுக்கு சென்று விசாரிக்கவேண்டும். இல்லையேல் உரிமைமீறல் செயலாக கருதப்படும்.

5. **குற்றவாளிகளை கைது செய்வது** — போலிசின் கைது செய்யும் நடவடிக்கை முக்கிய மனிய உரிமைபற்றிய செயலாகும். இதனை சர்வஜாக்கரத்தையாக கையாளவேண்டும். பொதுவாக மனித உரிமை மீறியசெயல் இங்குதான் நடக்கிறது. எந்த ஒரு கைதுசெய்யப்பட்ட நபரும் போலீஸ் காவலில் 24-மணி நேரத்திற்கு மேல் காவல்நிலையத்தில் வைத்திருக்ககூடாது. நாள் கணக்கில் பதிவு இல்லாமல் காவல்நிலையத்தில் வைத்திருப்பது அவ்வப்போது நடக்கும் உரிமைமீறிய செயல். லாக்கப்பில் வைத்து

கொடுமைப்படுத்துவது, லாக்கப் மரணம், போலிஸ் காவலில் பெண்களை மானபங்கப்படுத்துவது, கற்பழிப்பு நடத்துவது மிகவும் மோசமான அத்துமீறிய செயல். இத்தகைய குற்றசெயல்களில் இருந்து காவல்நிலைய பொறுப்பிலும் மற்ற அலுவல்களிலும் உள்ளவர்களிலும் உள்ளவர்கள் தப்பமுடியாது.

6. **பிணையில் விடுவது –** பிணையில் விடக்கூடிய குற்றங்களில் குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்கு பிணையில் போகலாம் என்று காவலர் சொல்வதோடு ஜாமீனிலும் அனுப்பவேண்டும். ஜாமீனில் விடாமல் காலம்கடத்துவதும் அவர்களை மனஉளைச்சலில் ஆளாக்குவதும் தவறு. சில சமையங்களில் சில காரணங்களுக்காக அவர்களை துன்பம்படுத்துவதும் உண்டு.

7. **சோதனை செய்வது –** சி.ஆர்.பி.சி –பிரிவு 100-யின் படி ஒரு இடத்தை சோதனை செய்வது கிடையாது. சோதனையிடுவதில் மேற்படி சட்டங்களில் உள்ள மற்ற பிரிவுகள் 47, 165-களையும் கவனிப்பதில்லை. ஒரு வீட்டை சோதனைசெய்த பிறகு அந்த வீட்டில் தாறுமாறாக போடப்பட்டிருக்கும் பொருட்களின் நிலையை பார்க்கும்போது அத்தகைய சோதனைக்குறியவர் படும்பாடு அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

8. **பொருட்களை கைப்பற்றுவது** - சி.ஆர்.பி.சி –பிரிவு 165-யின் படி போலீஸ் அதிகாரிகளுக்கு பொருட்களை கைப்பற்றும் உரிமை இருக்கிறது. ஆனால் மனித உரிமை எப்போது மீறப்படுகிறதென்றால் மேற்படி பொருட்களை உடனே நீதிமன்றங்களுக்கு அனுப்புவதில்லை. பொருட்களுக்கு உரியவர்கள் அதிக துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றன.

9. **குற்றபத்திரிக்கை தாக்கல்** - குற்றபத்திரிக்கை உரிய நேரத்தில் கோர்ட்டில் தாக்கல்செய்யப்படுவதில்லை.

**குறிப்பு** - மனித உரிமைமீறல் சம்மந்தப்பட்ட அனைத்து இந்திய அரசியல் சாசனத்தில் கண்டுள்ள அடிப்படை உரிமைகள் சி..ஆர்.பி.சி.–யில் உள்ள போலீஸ் அதிகாரங்களும் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறை எல்லைகளும் சேர்த்தே படிக்கவேண்டும். உச்சநீதிமன்றம் அளித்த 11 கட்டளைகள் இன்றியமையாதது. அதேபோல் போலீஸ் ஸ்டான்டிங் உத்தரவில் கண்டுள்ளபடி தெரிந்துகொள்ளல் வேண்டும்.

**கைவிலங்கு –** ஒரு குற்றவாளிக்கு கைவிலங்கு போடுவது என்பது கோர்ட்டு உத்தரவு பெற்று செய்யவேண்டும். அத்தகைய நபர் ஒரு பயங்கர குற்றவாளியாக இருக்கவேண்டும். பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் கைவிலங்கு போடக்கூடாது.

## மனித உரிமை பாதுகாப்பு சட்டம் - 1993

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளான சட்டத்தின் முன் அனைவரும் சமம், பேச்சுரிமை மற்றும் உரிமைகளை பேணிக்காக்க ஏற்படுத்தப்பட்ட சட்டம், இது இந்தியா முழுமைக்கும் செல்லும். இச்சட்டம் 1993 –ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாள் அமுலுக்கு வந்தது.

### இந்திய சட்டத்தின் பிரிவு 22-யின் படி:

1. முப்படைப்பிரிவு என்பது இந்திய அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் தரைப்படை, கப்பல்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றை குறிக்கும்.
2. தலைவர் என்பது மாநில மனிதஉரிமைகள் ஆணையத்தின் தலைவரைக்குறிக்கும்.
3. ஆணையம் என்பது தேசிய மனிதஉரிமைகள் ஆணையத்தைக்குறிக்கும்.
4. மனிதஉரிமைகள் என்பது அரசியல் அமைப்புச் சட்டப்படி குடிமகனுக்கு வழங்கப்பட்டுள்ள மனிதஉரிமைகளை பற்றி குறிக்கும்.
5. மனிதஉரிமை நீதிமன்றம் என்பது இச்சட்டத்தின் பிரிவு 30-ல் சொல்லப்பட்டுள்ள மனிதஉரிமைகள் நீதிமன்றத்தினைக்குறிக்கும்.
6. உறுப்பினர் என்பது மாநில மனிதஉரிமைகள் ஆணைத்தின் உறுப்பினர் என பொருள்படும்.
7. தேசிய சிறுபாண்மையினர் ஆணையம் என்பது இச்சட்டப்பிரிவு 3-ன் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தைக் குறிப்பிடுகிறது.

பொது ஊழியர் என்பது இந்திய தண்டனைச்சட்டத்தின் பிரிவு 21-ல் சொல்லப்பட்டுள்ள நபர்களைக்குறிக்கும். மாநில ஆணையம் என்பது மாநில மனித உரிமை ஆணையத்தைப்பற்றி குறிப்பிடுகிறது.

இச்சட்டத்தின் பிரிவு 3-ன் படி மத்திய அரசு தேசிய மனிதஉரிமைகள் ஆணையம் என்ற குழுமத்தை இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளை, இதில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி நிறைவேற்ற நியமிக்கலாம். இந்த ஆணையத்தில்.

1. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதி அரசராக இருந்தவர் தலைவராகவும்.
2. உச்சநீதிமன்றத்தின் நீதி அரசர் ஒரு உறுப்பினராகவும்
3. உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதி அரசர் ஒரு உறுப்பினர் ஆகவும்.
4. மனிதஉரிமைகள் பற்றி நன்கு அறிந்தவர்களும் நடைமுறையில் அனுபவம் மிக்கவர்கள் இருவரை உறுப்பினர்களாகவும்.
5. தேசிய சிறுபான்மை ஆணையத்தின் தலைவர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் தேசிய ஆணையத்தின் தலைவர், தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள்.

இவ்வாணையத்தின் கடமைகளையும், உத்தரவுகளையும் நிறைவேற்ற உயர்நிலை உரிமையியல் அலுவலர் இந்த ஆணையத்தின் செயலாளர் தலைவராக நியமிக்கப்படுவார். இந்த ஆணையத்தின் தலைமை இடம் புதுடில்லி.

**பிரிவு - 4** கீழ்கண்ட நபர்களை தலைவராகவும் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவின் பரிந்துறையின் பேரில் தேசியமனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் இந்திய குடியரசு தலைவர் நியமிப்பார். அந்த குழுவின் தலைவர் இந்திய பிரதமஅமைச்சர்.

**உறுப்பினர்கள்:**

1. நாடாளுமன்றத்தலைவர்
2. மத்திய உள்துறை அமைச்சர்
3. நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவர்
4. நாடாளுமன்ற மேலவையின் எதில் கட்சித்தலைவர்
5. நாடாளுமன்ற மேலவையின் துணை தலைவர்.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு பதவியில் இருக்கும் உச்சநீதிமன்ற நீதி அரசரையோ, உயர்நீதி அரசரையோ, உறுப்பினர்களாக நியமிக்கவேண்டுமானால் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதி அரசரின் ஆலோசனையின் பேரில்தான் நியமிக்க வேண்டும்.

**பிரிவு-5** இந்த ஆணையத்தின் தலைவரையோ உறுப்பினர்களையோ நீக்கும் வரைமுறைகளை விவரிக்கிறது.

கீழ்கண்ட காரணங்களுக்காக குடியரசுத்தலைவர், ஆணையத்தின் தலைவரையோ, உறுப்பினர்களையோ பதவி நீக்கம் செய்யலாம்.

1. தவறான நடத்தைக்காக (இது உச்சநீதிமன்றத்தால், விசாரிக்கப்பட்டு நிருபிக்கப்பட்டிருக்க வேண்டும்)
2. இன்சால் வென்சியாக அறிவிக்கப்படும்போது.
3. ஊதியம் பெற்று வேறு அலுவல் பார்க்கும்போது
4. மனதால், உடலால் பாதிக்கப்பட்டு அலுவல் பார்க்க முடியாத போது
5. நீதிமன்றத்தால் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று அறிவிக்கப்படும்போது
6. ஒழுங்கீன நடவடிக்கைகளுக்காக சிறை தண்டனை பெறும்போது.

**பிரிவு-6** ஆணையத்தின தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கோ அல்லது 70 வயது வரையோ பதவியில் இருக்கலாம்.

ஆணையத்தின் உறுப்பினர் பதவியேற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு பதவியில் இருக்கலாம். இவர் 70 வயதுவரை மீண்டும் உறுப்பினராக நியமிக்க தகுதிபடைத்தவர்.

இதன் தலைவரோ, உறுப்பினரோ பதவிக்காலம் முடிந்தபின் மத்திய அல்லது மாநில அரசுகளில் பதவி வகிக்க தகுதியற்றவர் ஆகிறார்.

**பிரிவு-7** ஆணையத்தின் தலைவர் பதவி காலியாக இருக்கும்போது அவர் விடுப்பில் இருக்கும்போதோ குடியரசு தலைவர் ஒரு உறுப்பினரை தலைவராக செயல்படும்படி ஆணைபிறப்பிக்கலாம்.

**பிரிவு-8** இந்த பிரிவு உறுப்பினர்களின் ஊதியம் படிகள் மற்றும் இதரசலுகைகளை வரையறுக்கிறது. எந்த உறுப்பினரின் சலுகைகளும் உறுப்பினராக நியமிக்கப்பட்டால் பாதிக்காதவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

**பிரிவு-9** ஆணையம் அமைக்கப்பட்டதில் உள்ள குறைபாடுகளைகாட்டியோ, ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவி வெற்றிடத்தை காரணம் காட்டியோ ஆணையத்தின செயல்முறை ஆணைகளை நிராகரிக்கமுடியாது.

**பிரிவு-10** ஆணையத்தின் கூட்டம் தலைவர் கூறும் இடத்திலும் நேரத்திலும் கூடும்.

**பிரிவு-11** மத்திய அரசு கீழ்கண்ட அலுவலர்களை ஆணையத்தின் பணிகளுக்காக நியமிக்கவேண்டும்.

1. அரசு செயலர் பதவி நிலையிலுள்ள ஒரு அலுவலரை, ஆணையத்தின் பணிகளுக்காக நியமிக்கவேண்டும்.
2. காவல்துறை இயக்குனர் பதவி நிலையிலுள்ள ஒருவரை விசாரணை அலுவலராகவும் அவருக்கு தேவையான மற்ற அலுவலர்களையும் நியமிக்கவேண்டும். தேவைக்கேற்ப மற்ற அலுவலர்களையும் ஆணையம் நியமித்துக்கொள்ளலாம்.

**பிரிவு-12** ஆணையத்தின் அலுவல்களை இது விவரிக்கிறது. மனித உரிமைகளை மீறுதல் சம்மந்தப்பட்ட அனைத்து புகார்கள் மீதும் விசாரணை செய்ய, தலையிட, சரிசெய்ய அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

**பிரிவு-13 & 14** — ஆணையத்தின் விசாரணை அதிகாரங்களை விவரிக்கிறது.

**பிரிவு-17 & 18** — ஆணையத்தின் விசாரணை செயல்முறைகளை விளக்குகிறது.

**பிரிவு - 21** மாநில மனிதஉரிமைகள் ஆணையம் அமைப்பதுபற்றி விவரிக்கிறது.

**தலைவர் -** உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் பதவிநிலையிலுள்ள நீதியரசர்.

**உறுப்பினர்கள் - 1** உயர்நீதிமன்ற நீதியரசர். (2) அமர்வுநீதிமன்ற நடுவர் (3) மனிதஉரிமைகள் சம்மந்தமான அறிவும், அனுபவமும் உள்ள இரு நபர்கள்.

**செயலாளர் -** செயலாளர் பதவிநிலையிலுள்ள உரிமையியல் அலுவலர் மாநில ஆணையத்தின் தலைமையிடம் அந்தந்த மாநில அரசால் நிர்ணயிக்கப்படும்.

**பிரிவு - 22** ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதை விளக்குகிறது. கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்டு குழுவின் பரிந்துரையின் பேரில் மாநிலஆளுநர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கிறார்.

**தலைவர் -** மாநில முதல்வர்

**உறுப்பினர்கள்**

1. சட்டமன்றத்தலைவர்
2. மாநில உள்துறை அமைச்சர்
3. சட்டமன்ற எதிர்கட்சித்தலைவர்
4. சட்ட மேலவைத்தலைவர்
5. சட்ட மேலவை எதிர்கட்சித்தலைவர்

## மனித உரிமைகள்:

மனிதஉரிமைகள் பற்றி சட்டரீதியான தகவல்கள், புகார் கொடுப்பவர்கள், சந்தேக சூழ்நிலையில் உள்ள நபர்கள், குற்றவாளிகள், காவலர்கள், செய்யவேண்டிய கடமைகள், இலாக்காபூர்வ அறிவுரைகளும் கட்டளைகளும்.

**இலாக்கா பூர்வகட்டளைகள்** - பிராது கொடுப்பவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், தவறு செய்தவர்களின் பொறுப்பும் தண்டனையும் பற்றியது மற்றும் கைதாகி போலீஸ் பாதுகாப்பில் இருக்கும் குற்றவாளிகளை நடத்தும் முறைகள்.

## 1. மனித உரிமைகள் பற்றி கருத்து மற்றும் தத்துவம்:

1948- டிசம்பர் 10, அன்று ஐக்கிய நாடுகளால் செய்யப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் பற்றிய சாற்றுரையானது தனிமனிதனின் வாழ்க்கை மற்றும் தன்னுரிமையின் பாதுகாப்பு முக்கியத்துவம் சேர்க்கிறது. மற்றும் அது மனித மாண்பு பறறிய மரியாதையை வளியுறுத்துகிறது. ஐக்கிய நாடுகள் மற்றும் இந்திய அரசமைப்பு காப்பு போர்வையின் கீழ் அது இப்போது ஒரு பன்னாட்டுச்சட்டமாக இருக்கிறது. மற்றும் இனம், நிறம், சமயம் மற்றும் ஜாதி வேற்றுமை பாராட்டுதலன்றி தனியொருவரின் மற்றும் சமூதாயத்தின் குடியியல் அரசியல் சமூகபண்பாட்டு உரிமைகளை பாதுகாக்கும் அரசமைப்பு வகைமுறையாகவும் இருக்கிறது.

மனித உரிமைகள் வகைமுறைகளின்படி தனியொருவரின் வாழ்வு அரசாலோ அல்லது அதன் செயலாக்க இயந்திரங்களாலோ அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட உரிய நடைமுறைப்படி அல்லாமல் மேலாதிக்ககுழு எதனாலுமோ ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது பறிக்கப்படமுடியாது. சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம். எவர் ஒருவருக்கும் மனம்போனபடி கைது செய்வதற்கோ அல்லது காவல் வைப்புக்கோ உட்படுத்தப்படமாட்டார். குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது ஆள்காவல் வைப்புக்கோ உட்படுத்தப்படமாட்டார். குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது ஆள் எவரும், காவலர், குற்றவியல் நடுவர் அல்லது சிறை நிறுவாகத்தினரின் கைகளில் மனித நேயமற்ற மற்றும் கொடுமையான நடத்துகைக்கு உட்படுத்தப்படுதல் கூடாது. இவ்வாறு மனித உரிமைகளின் வகைமுறைகள் குற்றவியல் நீதிநிர்வாகத்தில் சரியான போக்குடனும் குற்றவியல் சட்ட நிறுவாகத்தில் மனிதநேய அணுகுமுறையுடனும் தொடர்புகொண்டுள்ளது.

மனிதஉரிமைகள் வகைமுறைகளின்படி தனியொருவரின் வாழ்வு அரசாலோ அல்லது அதன் செயலாக்க இயந்திரங்களாலோ அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட உரிய நடைமுறைப்படி அல்லாமல் மேலாதிக்ககுழு எதனாலுமோ ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது பறிக்கப்படமுடியாது. சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம். எவர் ஒருவரும் மனம்போனபடி கைது செய்வதற்கோ அல்லது காவல் வைப்புக்கோ உட்படுத்தப்படமாட்டார். குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது ஆள் எவரும், காவலர், குற்றவியல் நடுவர் அல்லது சிறை நிறுவாகத்தினரின் கைகளில் மனித நேயமற்ற மற்றும் கொடுமையான நடத்துகைக்கு உட்படுத்தப்படுதல் கூடாது. இவ்வாறு மனித உரிமைகளின் வகைமுறைகள் குற்றவியல் நீதிநிர்வாகத்தில் சரியான போக்குடனும் குற்றவியல் சட்ட நிறுவாகத்தில் மனிதநேய அணுகுமுறையுடனும் தொடர்புகொண்டுள்ளது.

ஐக்கியநாடுகளின் அனைத்துலக மனித உரிமைகள் சாற்றுரையில் 30-உறுப்புகள் அளவுக்கு உள்ளன. 3 முதல் 21-வரை உள்ள உறுப்புகள் தனிமனிதனின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுடன் செயல் தொடர்பு கொள்கின்றனர். 22 முதல் 27 வரை உள்ள உறுப்புகள் தனிமனிதர் மற்றும் தனிமனித குழுக்களின் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளுடன் செயல் தொடர்பு கொள்கின்றனர்.

## 2. கைது செய்தல் பற்றி இந்திய அரசமைப்பு மற்றும் மனித உரிமைகள்:

நமது அரசமைப்பை உருவாக்கியவர்கள் அரசமைப்பின் மூன்று மற்றும் நான்கு —ஆம் பகுதியின் மூலம் குடிமக்களுக்கு மற்றும் குறித்த சிலதேர்வுகளின் (எ.டு.20 (3)-ஆம் உருப்பு) குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும்கூட அடிப்படை உரிமைகளுக்கு வகைசெய்வதன் மூலம் மனிதஉரிமைகள் பற்றிய கருத்துக்கு வடிவம் கொடுத்துள்ளனர். உள்ளபடியாகவே 1948-ஆம் ஆண்டு அனைத்துலக மனிதஉரிமைகள் சாற்றுரையில் மொத்தம் உள்ள 30-உறுப்புகளில் குறைந்த அளவு 23-உறுப்புகள் இந்திய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டு ஒருகிணைக்கப் பட்டடிருக்கின்றன.

## 3. இந்திய அரசமைப்பு மற்றும் அனைத்துலக மனிதயுரிமைகள் சாற்றுரை (1948)-யின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவரின் பாதுகாப்புகள்

இந்திய அரசமைப்பின் 21 மற்றும் 22-ஆம் உறுப்புகளின் கீழும் அனைத்துலக மனித உரிமைகள் சாற்றுரை (1948)-ன் 35- மற்றும் 9-ஆம் உறுப்புகளின் கீழும் கைது செய்யப்பட்ட ஆள் ஒருவருக்குரிய பாதுகாப்புநலன்கள் மற்றும் பாதுகாப்பளிப்புக்கள் ஒருகிணைக்கப் பட்டிருக்கின்றன.

### (அ) இந்திய அரசமைப்பின்கீழ் கைது செய்யப்படுபவர் ஒருவரின் பாதுகாப்பளிப்பு.

இந்திய அரசமைப்பின் 21 மற்றும் 22-ஆம் உறுப்புகளானவை ஒரு குடிமகனை தன்னுரிமையை பொருத்தமட்டில் அடிப்படை உரிமைகளின் சாரமாக இருக்கின்றன. கைது செய்யப்படுபவர் ஒருவரையோ அல்லது குற்றம் சுமத்தப்படுபவர் ஒருவரையோ உள்ளடக்குகிறது. அந்த இரண்டு உறுப்புகளும் பின்வருமாறு ஆராயப்படுகின்றன.

21-ஆம் உறுப்பின்படி ஒவ்வொருவருக்கும் சாதி, இனம், சமயம், மொழி மற்றும் பாலினம் அடிப்படைமீது வேற்றுமை பாராட்டுதல் ஏதுமின்றி வாழ்வதற்கும் ஆளின் தன்னுரிமைக்குமான பாதுகாப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கேற்ப சட்டத்தால் நிறுவப்பட்ட உரிய நடைமுறைகளை

மேற்கொள்வதன் மூலம் அல்லாமல் எவரொருவரும் அவருடைய வாழ்வையோ அல்லது ஆளின் தன்னுரிமையையோ இழப்பு செய்யப்படுதல் ஆகாது. எவரொருவரும் மனிதநேயம் குறைந்த நிலையில் வாழ்வதற்கும் கட்டாயப்படுத்தப்படுதல் ஆகாது.

ஒவ்வொருவரும் உடலுக்கும், உயிர் வாழ்வுக்கும் அவர் மனிதனால் வாழ்வதற்கும் தேவையான உரிமையை பெற்றிருக்கிறார்.

22-ஆம் உறுப்பானது மனம்போனப்படி கைதுசெய்தல் மற்றும் காவல் வைப்பிலிருந்து தனிமனிதனுக்கு பாதுகாப்பு நலமும் அளிப்பும் வழங்க வகைசெய்கிறது. அதன் பல்வேறு பிரிவுகூறுகள் தெளிவுபடுத்தி சாற்றுரைப்பவதாவது.

1. கைது செய்யப்பட்டுள்ள எவரும் அவ்வாறு கைதுசெய்யப்பட்டதற்கான காரணங்கள் கூடிய விரைவில் அவருக்கு தெரிவிக்க பெறாமல் காவலில் இறுத்திவைக்கப்படுதல் ஆகாது. மேலும் அவருக்கு தான் விரும்பிய வழக்குரைஞரை கலந்தாய்வுசெய்வதற்கும் அவர் வழியாக எதிர்வாதம் செய்வதற்குமான உரிமை மறுக்கப்படுதலும் ஆகாது.
2. கைது செய்யப்பட்டு காவலில் இறுத்திவைக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவர் கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து மிகவும் அருகில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை சென்றடைவதற்கு தேவையான காலம் நீங்கலாக அவ்வாறு கைதுசெய்யப்பட்டதிலிருந்து 24-மணி நேரம் கால அளவிற்குள் அக்குற்றவியல் நடுவரிடம் முன்னிலைபடுத்தப்படுதல் வேண்டும். மேலும் அவர் ஒரு குற்றவியல் நடுவரின் ஆணையின்றி மேற்சொன்ன காலஅளவினை கடந்து காவலில் வைக்கப்படுதலும் கூடாது. மகாராஷ்டிரா-மாநிலம் எதிர்-ஷோபாராம் AIR 1966.

Section 1910-என்னும் வழக்கில் ஒரு குடிமகனை பொறுத்தமட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்ட உடனேயே இந்திய அரசமைப்பில் 22-ம் உறுப்பின் செயல்பாடு அதன் செயல்பாட்டினை தொடங்குகிறது. மற்றும் அவருடைய சுகந்திரத்தினை திரும்ப பெறுவதற்குரிய செயல்படிகளை உடனேயே எடுக்கலாம்.

**(ஆ) அனைத்துலக மனித உரிமைகள் சாற்றுரையின் 1948-ன் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு பாகாப்பளிப்பு:**

3-ஆம் உறுப்பு ஒவ்வொருவரும் அவருடைய உயிர் தன்னுரிமை மற்றும் பாதுகாப்புருதிக்கு உரிமைபெற்றிருக்கின்றார் என்று கூறுகிறது.

5-ஆம் உறுப்பு ஒவ்வொருவரும் சித்தரவதைக்கோ அல்லது கொடுமையான மனிதநேயமின்மை இழிவாக நடத்துதல் தண்டனைக்கோ உட்படுத்துதல் ஆகாது என்று கூறுகிறது.

9-ஆம் உறுப்பு எவரொருவரும் மனம்போனபடி கைதுசெய்தல் காவல் வைப்பு அல்லது நாடுகடத்துதலுக்கு உட்படுத்துதல் ஆகாதென விதிக்கிறது.

## கைது செய்தலை திறம்படசெய்ததற்கான நடைமுறை:

46 (2)-ஆம் பிரிவில் “எல்லா வழிவகைகளையும் பயன்படுத்தலாம்” சொற்கள் குறிப்பிடுகிறவாறு வழிக்காவலாக செல்லும் காவலர்குழு சில சமையங்களில் கைவிலங்குகளை குறிப்பாக சிறைகளிலிருந்து

நீதிமன்றத்திற்கு விசாரணை கைதிகளை அந்தக்குழு கொண்டுவருகையில் மற்றும் எதிர் எதிர் நிலையில் பயன்படுத்தப்பட வேண்டியதாகிறது. இந்த தருவாயில் வழிக்காவலாக செல்லும் காவலர்குழு கைவிலங்குகளின் பயன்பாடுபற்றி உச்சநீதிமன்றத்தின் வழிபாட்டு நெறிகளை அறிந்திருக்க வேண்டும்.

### அ) கை விலங்குகள் பற்றிய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுநெறிகள் :

மேண்மைமிகு உச்சநீதிமன்றமானது கைவிலங்குகள் எப்போது பயன்படுத்தபடுதல் வேண்டும் எப்போது பயன்படுத்தபடுதல் கூடாது என்பது பற்றிய பொருள்மீது பின்வரும் வழக்குகளில் அதனுடைய தீர்ப்புகளை அளித்திருக்கிறது.

### கைவிலங்குகளை எப்போது பயன்படுத்த வேண்டும் :

பிரேம் சங்கர் சுகலா-எதிரி-டில்லி நிர்வாகம் AIR 1980 Section 1535-என்னும் வழக்கில் சிறைக்கதி ஆபத்தானவராக மற்றும் வெறிக்கொண்டவராக இருப்பின் அல்லது சிறைக்கைதி காவல் வைப்பினை தகர்த்து வெளியேறவோ அல்லது மறைந்து செல்வதற்கான சூழ்ச்சியோ செய்ய முயலுகிறார்யெனில் கைவிலங்குகள் வழிக்காவலாக செல்லும் காவலர்குழு சிறைகைதியின் முன்நடத்தைகளின் அடிப்படையில் கருத்தினை கொள்ளவேண்டும் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

## கைது செய்யப்பட்டவரின் உரிமைகள்

கைதுசெய்யப்பட்ட ஒரு ஆளுக்கு இந்திய அரசமைப்பின் கீழும் 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் கீழும் பொருப்புறுதியளிக்கப்பட்ட உரிமைகள் பின்வருவன.

### 1. கைதுசெய்வதற்குரிய காரணங்கள் தெரிவிக்கப்படவேண்டிய உரிமை:

பிடியாணையுடனோ அல்லது பிடியாணையின்றியோ கைதுசெய்யும் ஒவ்வொருவரும் கைதுசெய்கின்ற ஆள் கைதுசெய்யப்படுகிற ஆளிடம் அவர். கைதுசெய்யப்படுவதற்குரிய காரணங்களை தாமதமின்றி தெரிவிக்கவேண்டும். இந்திய அரசமைப்பில் 22(1)-ஆம் உறுப்பு குற்றவியல் நடைமுறைச் சட்டபிரிவுகள் 50(1), 55, 75-).

### 2. பிணையில் செல்வதற்கான உரிமை தெரிவிக்கப்படவேண்டிய உரிமை:

பிணையில் விடத்தக்க குற்றச்செயல் ஒன்றில் ஓர் ஆள் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படுகிறபோது, கைதுசெய்யப்பட்ட ஆள் பிணையில் விடுவிக்கப்படுவதற்கான உரிமையை பெற்றிருக்கிறார் என அவருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் (பிரிவு 50(2) & 436).

### 3. நீதிமன்ற கூர்ந்தாய்வின்றி 24-மணி நேரத்திற்குமேல் காவலில் இருத்திவைக்கப்படக்கூடாத உரிமை:

கைதுசெய்கின்ற ஒவ்வொரு நேர்விலும் கைதுசெய்கின்ற ஆள் கைதுசெய்யப்பட்ட ஆளை கைதுசெய்த நேரத்திலிருந்து 24-மணி நேரத்திற்குள் குற்றவியல் நடுவர் முன்னால் ஒப்படைக்கவேண்டும். அந்த 24-மணிநேரத்ததைக் கணக்கிடுவதில், கைதுசெய்த இடத்திலிருந்து குற்றவியல் நடுவர் நீதிமன்றத்துக்குச்செல்வதற்கான பயணநேரத்தை நீக்கிவிட வேண்டும். (அரசமைைப்பின் 22(2)-ஆம் உறுப்பு மற்றும் பிரிவு 57).

### 4. வழக்குரைஞர் ஒருவரைக்கலந்தாலோசிக்கும் உரிமை

கைதுசெய்யப்பட்ட ஒவ்வொருவரும் அவர் தெரிவு செய்யும் வழக்குரைஞர் ஒருவரைக்கலந்தாலோசிக்கும் உரிமைக்கு, அரசமைப்பு மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் வகைமுறைகள் ஆகிய இரண்டும் அங்கீகாரம் அளிக்கின்றன.

### 5. கைதுசெய்யப்பட்ட ஏழைகளுக்கு இலவச சட்டஉதவி உரிமையும் அதைப்பற்றி தெரிவிக்கப்பட வேண்டிய உரிமையும்.

காத்ரி(2)-உதிர், பீஹார் மாநிலம் (1981)/S.C.C.627 வழக்கில் மாநிலமானது ஏழையான குற்றவாளி ஒருவருக்கு இலவசச்சட்ட உதவி அளிக்கவேண்டும் என்ற (21-ஆம் உறுப்பில் உள்ளடக்கமான) அரசமைப்பு கட்டளையின் கீழ் உள்ளது மற்றும் சட்ட உதவி அளிப்பதற்கான இந்த அரசமைப்புக் கட்டுப்பாடானது. நீதமன்ற விசாரணை தொடங்கும்போது மட்டுமின்றி குற்றவாளி குற்றவியல் நடுவர் முன்னர் முதல்முறையாக ஒப்படைக்கப்படும்பொழுதும், அவர் அவ்வப்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்படும்பொழுதும் எழுகிறது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பும் கூறியிருக்கிறது.

### 6. மருத்துவர் ஒருவரால் பரிசோதனை செய்யப்படவேண்டிய உரிமை

பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன்பேரில் குற்றவாளியை மருத்துவ பரிசோதனை செய்வதற்குக் குற்றவியல் நடுவர் கட்டளையிடலாம்.

(அ) ஏதேனும் குற்றம் அவரால் செய்யப்பட்டது என்பதை மருத்துவப் பரிசோதனை மறுத்தல் அல்லது (ஆ) அவருடைய உடலில் பிற குற்றம் ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அதனை நிறுவுதல் (பிரிவு - 54).

## கைதுசெய்தலுக்குப் பிறகு பின்பற்றவேண்டிய நடைமுறைகள்

கைதுசெய்தலுக்குப் பின்பு பின்பற்றப்படவேண்டிய நடைமுறை குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளால் வெவ்வேறு சூழ்நிலைகளில் விதிக்கப்பட்டுள்ளது. அந்த நடைமுறைகள் பின்வருமாறு.

1. கைதுசெய்யும் காவல் அலுவலர் கைதுசெய்யப்பட்ட ஆளிடம் கைதுக்கான காரணத்தைத் தெரிவிக்கவேண்டும் (அரசமைப்பின் 22-ஆம் உறுப்பு மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் 50-ஆம் பிரிவு).

2. குற்றச்செயலானது பிணையில்விடத்தக்க ஒன்றாக இருப்பின், கைது செய்யப்பட்டவரிடம், அவர் பிணையில் செல்ல உரிமையுடையவர் என்பதை அவர் தெரிவிக்க வேண்டும்.

3. கைதுசெய்யும் காவல் அலுவலர் (கைது செய்யப்பட்டவர்) பிணையில் விடப்படவில்லையெனில் அவரிடம் காவல் அலுவலர் உடல் பரிசோதனை செய்யவேண்டும் மற்றும் அது பற்றிய ஒரு விவரக்குறிப்பையும் தயார்செய்யவேண்டும். அவர் அணிந்துள்ள ஆடைகளைத் தவிர அவரிடமுள்ள பிற பொருள்கள் அனைத்தையும் காவல் அலுவலர் எடுத்துவைத்திருக்கவேண்டும். அவரிடமிருந்து அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களைத் தெரிவிக்கின்ற பற்றுச்சீட்டு ஒன்றும் கைதுசெய்யப்பட்டவரிடம் கொடுக்கப்படவேண்டும். கைதுசெய்யப்படுபவர் ஒரு பெண்ணாக இருக்குமானால் நடத்தை நயம் கருதி

கண்டிப்பாக அவர் மற்றொரு பெண்ணால் மட்டுமே சோதனையிடப்படவேண்டும் (பிரிவு-51), அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்கள் அபாயகரமான ஆயுதங்களாக இருப்பின், அவற்றை கைதுசெய்யப்பட்டவர் முன்னிலைப்படுத்தப்படவேண்டிய நீதிமன்றத்தின் முன்னர் ஒப்படைக்க வேண்டும் (பிரிவு-52).

4. குற்றச்செயலைச் செய்வதற்கான சாட்சியத்தைப் பெறுவதற்கு கைது செய்யப்பட்டவரை அவர் மருத்துவப் பரிசோதனை செய்யவைக்கலாம். மற்றும் அத்தகைய மருத்துவப் பரிசோதனைக்குத் தேவையான பலத்தையும் அவர் பயன்படுத்தலாம் (பிரிவு-53).

5. அவர் கைது செய்யப்பட்ட நபரை தேவையற்ற காலதாமதமின்றி ஒரு குற்றவியல் நடுவர் முன்பு ஒப்படைக்கவேண்டும் மற்றும் குற்றவியல் நடுவரின் ஆணையைப்பெறாமல் (பிரிவு-56 மற்றும் 57) கைதுசெய்யப்பட்டவரை 24-மணி நேரத்துக்கு மேல் (பயண நேரம் நீங்கலாக) காவலில் வைத்திருக்கக் கூடாது.

6. கைதுசெய்யப்பட்டவர் தப்பியோடாமல் தடுப்பதற்குத் தேவையைவி மிகுதியான தடுப்புக்காப்புக்கு அவர் உட்படுத்தப்படுதல் கூடாது (எ.டு. கைவிலங்கு தடுப்புக்காப்பு முறையாகும் (பிரிவு-49)).

7. காவல் நிலையப்பொறுப்பில் உள்ள அலுவலர்கள் பிடியாணையின்றிச் செய்யப்படும் அனைத்துக்கைதுகள் குறித்தும் மாவட்டக் குற்றவியல் நடுவர் அல்லது உட்கோட்டக்குற்றவியல் நடுவருக்குத் தெரிவிக்கவேண்டும் (பிரிவு -58).

8. காவலரால் கைதுசெய்யப்பட்ட நபர் அவருடைய சொந்த முயற்சியின் பேரில் அல்லது பிணையத்தின் பேரில் அல்லது குற்றவியல் நடுவர் ஒருவரின் ஆணைகளின் கீழ் தவிர விடுவிக்கப்படக்கூடாது (பிரிவு-59).

கைதுசெய்யும் காவல் அலுவலர் கைதுசெய்தலுக்குப்பின்பு மேற்கண்ட நடைமுறைகளை மேற்கொள்ள கடப்பாடுடையவர் ஆவார்.

கைதுசெய்தல் குறித்து காவல் அலுவலரால் கடைப்பிடிக்கப்படவேண்டிய செய்யத்தக்கவை செய்யத்தகாதவை.

## (அ) செய்யத்தக்கவை

கைது ஒன்றினைச் செய்யும், காவல் அலுவலர், கைதுசெய்யப்பட்ட உடனேயே, 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் பின்வரும் கட்டாயமாகச் செய்யவேண்டிய வகைமுறைகளைப் பின்பற்றுவதற்கான ஒரு கடப்பாட்டினையும் ஒரு கடமையினையும் கொண்டிருக்கிறார்.

1. கைதுசெய்யும் காவல் அலுவலர் கைதுசெய்யப்படுபவரைச் சோனையிட்டு அவர் அணிந்திருக்கும் ஆடைகளைத்தவிர பிறபொருட்கள் அனைத்தையும் எடுத்துப் பாதுகாப்பான இடத்தில் வைக்கவேண்டும். அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களைத்தெரிவிக்கின்ற பற்றுச்சீட்டு ஒன்றினைக் காவல் அலுவலர் தயார்செய்து அதன் பிரதி ஒன்றினைக் கைதுசெய்யப்பட்டவரிடம் அளிக்கவேண்டும். கைதுசெய்யப்படுபவர் பெண்ணாக இருக்கும் நிலையில் பண்புகருதி அவர் மற்றொரு பெண்ணைக் கொண்டே பரிசோதனை செய்யப்படவேண்டும் (பிரிவு-51).

2. 51-ஆம் பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட பொருட்கள் தீங்கு விளைவிக்கக்கூடிய ஆயுதங்களாக இருக்கும்போது கைதுசெய்யப்படுபவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதற்கு முன்னவே, கைதுசெய்யும் அலுவலர் அவற்றை நீதிமன்றத்துக்கு அனுப்பவேண்டும் (பிரிவு-52).

3. கைது செய்தலானது கைதுசெய்த நபரை கைது அட்டை ஒன்றில் பதிவு செய்யப்படவேண்டும். அது அனைத்து விவரங்களுடன் பொதுநாட் குறிப்பிலும் குறிக்கப்படவும் வேண்டும். குறிப்பாக கைதுசெய்யும் நேரம் குறிக்கப்படவேண்டும். கைதுசெய்யப்பட்ட ஆளிடம் கைப்பற்றப்பட் பொருட்கள் ஏதேனுமிருப்பின் அவையும் பதிவுசெய்யப்படவேண்டும்.

4. கைதுசெய்கின்ற காவல் அலுவலர் கைதுசெய்யப்பட்டவரிடம் அவரை கைதுசெய்தல் குறித்த காரணங்களை தெரிவிக்கவேண்டும். மற்றும் அவர் செய்த குற்றச்செயல் பிணையில் விடத்தக்க ஒரு குற்றச்செயலாக இருப்பின் பிணையில் விடுவிக்கப்படுவதற்கான உரிமையையும் அவர் பெற்றிருக்கறார் என்பதையும் தெரிவிக்கவேண்டும் (பிரிவு-50).

5. கைதுசெய்யப்படுபவர் கைதுசெய்யப்பட்ட நேரத்திலிருந்து 24-மணி நேரத்திற்குள் குற்றவியல் நடுவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் (பிரிவு-57).

6. கைதுசெய்யும் காவல் அலுவலர் கைதுசெய்யப்பட்ட ஒரு ஆளின் உடல் பதிவுபெற்ற மருத்துவரால் பரிசோதனை செய்யப்படுவதானது குற்றச்செயல் புரிந்ததற்கான தடையங்களை புலப்படுத்தும்என கருதுவதற்கான நபரை பதிவுபெற்ற மருத்துவரிடம் அனுப்புதல் வேண்டும். (பிரிவு-53).

7. காவலராக கைதுசெய்யப்பட்ட நபர் எவரும் சொந்த பிணையம் அலலது குற்றவியல் நடுவர் ஒருவரின் ஆணைகளின்றி விடுவிக்கப்படுதல் கூடாது. கைதுசெய்யப்பட்டால் காவலில் இருக்கும்போது அவர் விரும்பினால் நண்பர், உறவினர் அல்லது அவரை அறிந்த அல்லது அவருடைய நலனில் அக்கறைக்கொள்ளக்கூடிய வேறு ஆள் ஒருவரை வைத்துக்கொள்வதற்கு அவர் உரிமைபாடுடையவர் என்று காவல் அலுவலர் தெரிவிக்கவேண்டும். நடைமுறை நிகழ்வை பொருத்து அவர் கைது செய்யப்பட்டு எங்கு காவலில் வைக்கப்பட்டடிருக்கிறார் என்பதை தெரிவிக்கலாம். கைது குறித்து யாருக்கு தெரிவிக்கப்பட்டது என்பது பற்றி காவல் நிலையத்தின் பொதுநாட்குறிப்பில் பதிவுசெய்யப்படவேண்டியது அவசியம்.

## (ஆ) செய்யத்தகாதவை:

காவலர்கள் நிலை மாறாமல் பயன்படுத்துகிற முறைகள் (நடைமுறையில் பயன்படுத்தப்படக்கூடாது) பின்வருவனவற்றை காவல் ஆணையங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கல்வி பிரிவு நடத்திய ஒரு ஆய்வு அளவை வெளிபடுத்துகிறது.

1. குற்ற ஒப்புரையை வெளிக்கொணர்வதற்கு நேர்மையற்ற முறையை பயன்படுத்துதல்.
2. காவல் நிலைய காவல் வைப்பில் மூன்றாம்தர முறையை பயன்படுத்துதல்
3. சட்டமுறையால் அனுமதிக்கப்பட்ட 24-மணி நேரத்துக்கும் அப்பால் கைதுசெய்யப்பட்ட ஆட்களை அவர்களுடைய காவல் வைப்பில் நிறுத்தி வைத்தல்.
4. கைது செய்யப்பட்டவர்களை அவர்கள் தேர்வுசெய்த வழக்குஞர்களை கலந்தாலோசிக்க விடாமல் மறுத்தல்.

5. முறை சாராமல் சட்டம் முரணாக மனம்போன போக்கில் கைது செய்தல்.
6. காவல் வைப்பில் சித்தரவதை, கற்பழித்தல் மற்றும் கொலை செய்தல்.
7. காவல் வைப்பில் ஆட்களை இழிவுபடுத்துதல் மற்றும் தரம்தாழ்த்துதல்.
8. காவலில் உள்ளவர்களை பட்டினி நிலைக்குதள்ளி அவர்களை விரும்பத்தகாத தற்கொலையை தேர்ந்தெடுக்கும் நிலையை ஏற்படச்செய்தல்.
9. கைதுசெய்யப்பட்டவர்களை கைவிலங்கிடுதல் காவல் வைப்பில் சங்கிலியால் கட்டுதல் அல்லது அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லும்போது சங்கிலியால்கட்டி பொதுஇடத்தில் அணிவகுப்பு நடத்துதல் முதலியவை.

இந்த வழிகளில் அதிகாரத்தை செலுத்துதலானது முழுமையான மனித உரிமைக்கு மனித மாண்புக்கும் எதிரானது என்பது சொல்லத்தேவையில்லை.

## மனித உரிமைகள் பால்உணர்வு மிகுதியாமைக்கு:

இந்தியாவில் பெண்களின்நிலை பால் மற்றும் பால்வினை கோட்பாடுகள், பெண்களுக்கு எதிர்ப்பான கொடுமைகள் பெண்களுக்கு எதிர்ப்பான சட்டரீதியான குற்றங்கள் பெண்கள்மீது சமூதாயத்தின் நிலைபாடுகள் காவல்துறை அமைப்பில் பெண்கள் பிரச்சனைகள்.

பெண்கள் குழந்தைகளை பேணிகாக்கும் தாய்மை என்ற நிலைக்கு அவர்கள் மட்டுமே உரித்தாவர். பெண்கள் அந்த குடும்பத்தினரின் கல்வி நலன் மற்றும் உணவு ஆகிய எல்லாவற்றையும் கவனிக்கின்றனர். தன் கணவனுக்கு நோய்வாய்படும் காலங்களிலும் மற்றும் வயோதிக காலத்திலும் உறுதுணையாக சேவை புரிகின்றனர். பெண்கள் அன்பு செலுத்துவதிலும் சந்தோஷம் அளிப்பதிலும் தன்மையாக இருப்பதிலும் உண்மையாக இருப்பதிலும் ஆறுதல் அளிப்பதிலும் அவர்களுக்கு நிகர் அவர்களே.

மனித உரிமை பிறப்பிலிருந்தே வருகிறது. வாழ்க்கை, சுகந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகிய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால் பெண்கள் விஷயத்தில் யாரும் இதனை கருத்தில் கொள்வதில்லை. பெண்கள் உலக ஜனத்தோகையில் பாதியாக உள்ளனர். பெண்களின் உரிமைகள் மீறிய செயல்கள் அவ்வப்போது நடைபெறுகிறது. சமூதாயத்தில் அவர்கள் பல கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனர். வரதட்சணை கொடுமை, கணவனுடன் எரித்தல் (சதி). பலாத்காரங்களுக்கு ஆளாகுவது, இருதாரங்களுக்கு ஆளாவது, குழந்தை பருவத்திலேயே திருமணத்திற்கு ஆளாவது, விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவது போன்ற தொல்லைகள் பெண்களின் உரிமைகளை பறிக்கிறது.

பலத்தரப்பட்ட வன்கொடுமைகள் பெண்கள் மீது நடத்துவருகிறது. இதில் முதல் இடமாக பெண்களின் கண்ணியத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் செயலாகும். இதனை பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் என்று சொல்லலாம். இத்தகைய குற்றச்செயல்கள் கொலை, கூட்டு கற்பழிப்பு, கடத்தல், கற்பழிப்பு, மனைவியை அடித்து சித்தரவதை செய்தல், வரதட்சணை கொடுமை, வரதட்சணை சாவு, பால்வினை குற்றங்கள் கிண்டல் செய்தல் ஆகும்.

இரண்டாவது வகை பெண் சிசுக்களை கருவிலும் பிறந்தபிறகு அழித்தல் பெண்கள் சமூதாயத்திற்கு பயன்படாதவர்கள் என்ற எண்ணத்தை காட்டவே இது நடக்கிறது.

மூன்றாவதாக சமூதாய, பொருளாதார, அரசியல். காரணங்கள்காட்டி அவர்களை ஒதுக்கிவைப்பதின்மூலம் பெண்களை வேறுபடுத்தி பார்க்கின்றனர் என்று நினைக்க தோன்றுகிறது.

அரசியல் சாசனத்தில் பெண்களின் உரிமைகள் காணவேண்டும். பிரிவு-14 சட்டத்தின்முன் அனைவரும் சமம். பிரிவு-15 பால் ரீதியாக வேற்றுமைக்கானக்கூடாது இதன் அடிப்படையில் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவேண்டும். சட்டரீதியாக இருபிரிவுகளாக பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் செயல்கள் இருக்கவேண்டும்.

1. போலிசார் சட்ட ரீதியாக கடைபிடிக்கவேண்டிய செயல்முறைகள்.
2. பெண்களுக்கு எதிராக குற்றங்கள் புரிபவர்களுக்கு தகுந்த தண்டனை பெற நடவடிக்கை எடுத்தல்.

1. போலிசார் விதிமுறைகளை பின்பற்றும்போது பெண்குற்றவாளியை கைதுசெய்யும்போது மகளிர் காவல் அலுவலர்களை பயன்படுத்தவேண்டும். சூரிய அஸ்தமனம் பின்பும் உதயம் முன்பும் அவர்களை கைதுசெய்து காவல் நிலையம் கொண்டுவரக்கூடாது. பெண் சாட்சிகளை விசாரிக்கையில் காவல் நிலையம் கொண்டுவரக்கூடாது. அவர்கள் இருக்கும் இடம் சென்று விசாரிக்கவேண்டும்.

2. பெண்களுக்கு எதிராக கீழ்காணும் குற்றபிரிவுகள்படி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| இ.பி.கோ-பிரிவு | **354** | - | பெண்களை மானபங்கப்படுத்துதல் |
| இ.பி.கோ-பிரிவு | **509** | - | பெண்களை கிண்டல் செய்வது |
| இ.பி.கோ-பிரிவு | **366** | - | பெண்களை கட்டாய திருமணத்திற்கு கடத்துவது |
| இ.பி.கோ-பிரிவு | **366A** | - | மைனர் பெண்களை விற்பது வாங்குவது |
| இ.பி.கோ-பிரிவு | **372** | - | விபச்சாரத்திற்கு பெண்களை விற்பதும் வாங்குவதும் |
| இ.பி.கோ-பிரிவு | **376** | - | வண்புணர்ச்சி |
| இ.பி.கோ-பிரிவு | **376B** | - | முதல் D வரை தன்வசம் உள்ள பெண்களை வன்புணர்ச்சிக்கு ஆளாக்குவது. |
| இ.பி.கோ-பிரிவு | **304** | - | வரதட்சணை மரணம் விளைவிப்பது. |
| இ.பி.கோ-பிரிவு | **498A** | - | வரதட்சணை கொடுமை செய்தல். |
| இ.பி.கோ-பிரிவு | **497** | - | திருமணம் ஆன பெண்களுடன் வேறு ஒருவன் புணர்ச்சி செய்தல். |
| இ.பி.கோ-பிரிவு | **302** | - | பெண் காரணங்களுக்காக கொலைசெய்தல் மற்றும் விபச்சார சட்ட தடுப்பில் உள்ள குற்றங்கள். |

**குறிப்பு:** பாண்டிச்சேரி காவல் சட்டம் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளித்துள்ள உரிமைகளைக் காக்க வன்கொடுமை தடுப்பு சட்டம் (1989) ஆகியவற்றை மனதில் கொள்க.

மனிதர்கள் பெண்களை சக்தி என்றும் சொல்லுகின்றனர். இந்து கடவுள்களில் பல பெண் தெய்வங்கள் உண்டு. பெண்களை மனைவியாக கொண்டவர்கள் அவர்கள் தாயாகவும், தாரமாகவும், சகோதரியாகவும், விலைமாதுநிலையில் இன்பம் தருபவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். பெண்களுக்கு மக்கள் சபை, சட்ட சபை, பஞ்சாயத்துராஜ்ய அமைப்புகளுக்கு தனியாக தொகுதி இட ஒதுக்கீடு செய்யும்

எண்ணம் உள்ளது. ஆனால் இன்னும் செயல்படுத்த முடியவில்லை. விபச்சார தடுப்புச்சட்டத்தில் பெண்களே அதிக குற்றவாளிகளாக உள்ளனர். இந்தியாவில் ஒவ்வொரு 54-நிமிடத்திற்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். ஒவ்வொரு 26-நிமிடத்திற்கு ஒரு பெண் மானம்பங்கம் செய்யப்படுகிறாள். ஒவ்வொரு 10-நிமிடத்திற்கு ஒரு மனைவி வரதட்சணை காரணமாக மரணம் அடைகிறாள்.

விபச்சார வழக்கில் சில பெண்கள் குற்றவாளிகள் சொல்லும் காரணங்களில் வறுமை என்பது அதிக அளவில் இல்லை. ஏமாற்றபட்டதே மிகுதியாக உள்ளது.

**அரசியல் சட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் மனித கடமைகள் கொண்டுவரப்பட்டன:**

1. சட்டத்தின் முன் எல்லோரும் சமம்.
2. சமுதாய உரிமைகள்
3. அரசியல் உரிமைகள்
4. சிறுபான்மையினரின் உரிமைகள்
5. சந்தேகத்திற்குரிய மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவர் உரிமைகள்
6. பொருளாதார மற்றும் நாகரீக உரிமைகள்
7. தனிநபர் தொடர்பான உரிமைகள்
8. சமய, கல்வி மற்றும் பண்பாண்டு உரிமைகள்

## மனித உரிமைகள் அதிகார ஆணையம்

மனித உரிமைகள் அதிகார ஆணையம் 1993-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ஆம் நாள் வடிவெடுத்தது. இவை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர் அல்லது அவர் சார்பான ஒருவரின் பிராதைப்பெற்று அதன்மீது விசாரணை நடத்துதல். மனித உரிமைகளை அலட்சியம் செய்து, அது மீறப்படும் நிலையில் தடுக்கத் தவறினாரா என்றும் மனித உரிமைகளை பற்றிய விஷயங்களை பரப்புவது மற்றவர்களுக்கு போதனை செய்வது தொடர்பான முயற்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியனவாம்.

உரிமைகள் எப்படி இருக்கவேண்டும் என்று வரையறுப்பது மட்டுமல்லாமல் அனைத்து நாடுகளுமே அவற்றை ஏற்று நடக்கும் சூழ்நிலை தேவை என்பதையும் இவ்வழி மூலம் பிரகடனப்படுத்தப்படுகிறது.

## சுதந்திரத்திற்கு முந்தைய பாரதத்தின் மனித உரிமைகள்

(அ) இந்திய அரசியல் சட்டவரைவு 1895 (உள்ளாட்சி முறை) ஹோம் ரூல் சட்ட வரைவு என்றும் வழங்கப்பட்டது.

(ஆ) மாண்டேகு-செம்ஸ் போர்டு அறிக்கை 1918-ஐரிஷ் குடியரசின் 1921-ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தின் சாரமுடைய அடிப்படை உரிமைகளின் பட்டியலாகக் கொண்டுள்ளது.

(இ) காமன் வெல்த் நாடுகள் எனும் சுதந்திரக் கூட்டமைப்பு நாடுகளின் 1925-ஆம் ஆண்டின் சட்டவரைவு அடிப்படை உரிமைகளை நிகர்த்த குறிப்புகள் கொண்ட அறிக்கையாகும்.

(ஈ) மோதிலால் நேரு கமிட்டி 1928.

**இந்திய மனிதனுக்கு சுதந்திரமாக சமத்துவ ரீதியில் சுதந்திரம் பெற வழி செய்கிறது. அவை:**

1. **வாழ்வியல் சுதந்திரம் -** ஒரு நாட்டால் உருவாக்கப்பட்டு அதன் மக்களுக்காகப் பாதுகாக்கப்படும் உரிமைகளும் தனிமனித சுதந்திரமாகும்.

2. **அரசியல் சுதந்திரம் -** நாட்டின் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் உரிமையாகும்.

3. **பொருளாதார சுதந்திரம்** - தங்களது உணவு, உடை, உறையுள் (வாழுமிடம்) ஆகியவற்றை தங்குதடையின்றி பெறுவதாகும்.

4. **இயற்கை சுதந்திரம் -** நாட்டின் சுதந்திரத்தையும் குறிக்கும். மனிதஉரிமைகள் என்ற சித்தாந்தத்தினை பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறான வரலாற்றேடுகளின் கால அட்டவணைகளின் மூலம் அறியலாம்.

*// சுயமரியாதை போற்றி பாதுகாக்கவேண்டியது காவல்துறையின் கடமை //*

✻ ✻ ✻ ✻